குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

மலர் 48 சுக்கில ஆண்டு புரட்டாசித்திங்கள் 10-10-89 [இதழ் 11

தருமை ஆதீனம் 25 ஆவது குருமகாசந்நிதானம்



சிவ

26½ ஆண்டுக்காலம் தருமையில் அருட்செங்கோல் ஓச்சி

10 — 11 — 1971 இல் காசியில் விசுவேசர் திருவடி நிழலில் இரண்டறக் கலந்த

கயிலை ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

பதினெட்டாவது ஆண்டு குருபூஜை விழா

22 — 10 — 89 ஞாயிற்றுக்கிழமை

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

அந்நிலையா னும்பிறவு மான்மா
  தத்திறமாம் [நந்
என்னிலையே சித்திக்கு மென்
  உன்னிலைதான் [நியம்பில்
இல்லதென வேநீ யியம்பு
  மளவைமுதல்
சொல்லுமது கேளாய்
  துணிந்து.

— முத்திநிச்சயம் 3

ஆசிரியர் :-

வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-

மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | 10-10-89 | இதழ் 11

உட்பொருள்

எண்		பக்கம்
1	ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர், ஸ்ரீ கமிலைக் குருமணி குருபூஜைப் பெருவிழா	561
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	566
3	ஸ்ரீ சபாபதிமூர்த்தி ...	570
4	பத்துக் கட்டளைகள் ...	572
5	கலிய நாயனார் ...	573
6	போதமும் சித்தியும் ...	577
7	பார்வையாளர் குறிப்பு (நாலி) ...	579
8	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ...	580
9	விதியும் மதியும் ...	583
10	இலிங்கபுராணத்தேவர்	587
11	செய்திகள் ...	593
12	எதிர்காலம் ...	597

உ
குருபாதம்
ஞானசம்பந்தம்
மலர் 48 ★ இதழ் 11
தருமை ஆதீனத் திங்கள் இதழ்
சுக்கில - புரட்டாசி 10—10—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல்ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

ஸ்ரீ கமலை ஞானப்பிரகாசர், ஸ்ரீ கயிலைக் குருமணி
குருபூஜைப் பெருவிழா

இருபெரும் அருளாளர்கள் :

திருக்கயிலாய பரம்பரை, தருமபுர ஆதீன அடியவர்களும், சீடர்களும், அன்பர்களும், இருபெரும் குருமூர்த்திகளுக்கு அஞ்சலி செலுத்தும் வாய்ப்பு இவ்வாண்டும் ஐப்பசித்திங்களில் அமைகிறது. தருமைஆதீன குருமுதல்வர்ஸ்ரீ குருஞானசம்பந்தரின் ஞானாசிரியர் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகரின் குருபூஜை விழா 20—10—89 திருவாரூரிலும், தருமை ஆதீன 25 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை 22—10—89 ஞாயிற்றுக்கிழமை தருமை, மற்றும் அவர்கள் பரிபூரணம் எய்திய ஸ்ரீ காசியிலும் சிறப்பாக

நிகழவுள்ளன. இவ்விருபெரும் அருளாளர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் "ஞானசம்பந்தம்" இவர் தம் அருளறப் பணிகளைப் பக்தியுணர்வுடன் நினைவு கூர்கிறது.

திருக்கயிலாய பரம்பரை :

திருக்கயிலாய பரம்பரையில் வந்த உமாபதி சிவத்தின் மாணவர் சீகாழி மச்சுச் செட்டியார். ஆசாரிய அபிடேகம் பெற்ற காலை இவர் அருள் நமசிவாயர் என தீட்சாநாமம் இடப்பெற்றார். இவருடைய மாணாக்கர்களுள் ஒருவராகிய காழி கங்கை மெய் கண்டார் வழியில் ஐந்து தலைமுறைகளுக்குப் பின் ஆறுவதாக வீற்றிருந்தருளிய அருளாளர் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள். இவர்களைச் "சிதம்பரநாத மாசிலாமணி கமலை ஞானப்பிரகாசப் பண்டாரம்" என முத்தி நிச்சயப் பேருரை வரைந்த ஸ்ரீ வெள்ளியம்பலவாண முனிவர் குறிக்கின்றார். கி. பி. 16 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த கமலை ஞானப்பிரகாசர் இலக்கண இலக்கியங்களிலும், சமய ஒழுக்கத்திலும் மிக்க ஞானாசாரியராகத் திருவாரூரில் வீற்றிருந்தார். இவர்களின் மாணாக்கர் பலர். அவர்களுள் ஒருவராகிய ஸ்ரீ குருஞானசம்பந்தரால் தருமபுர ஆதீனம் தோற்றுவிக்கப்பெற்றது.

வாழ்வியல் அற்புதங்கள் :

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிகர் வாழ்வில் சிவனருளால் நிகழ்ந்த அருள் அற்புதங்கள் பல 'ஞானப் பிரகாச மான்மியம்' என்ற நூலால் தெரிய வருகின்றன. திருவாரூர்த் திருக்கோயிலில், ஸ்ரீ தியாகராஜப் பெருமான் திருநடனம் நிகழ்ந்து கொண்டிருந்த போது பல்லக்கின் தண்டு முறிந்தது கண்டு, துணுக்குற்றசுவாமிகள்,

" அண்டமுழு தும்ஆழ்ந்து போகாமல் என்றும்போல்
பண்டை நிலைநிறுத்தும் பாதனே - துண்டுபட்ட
அசபா திருத்தம் அலையும் படிதன்
டிசையும் வகையருள்வாய் இன்று "

என்ற பாடலை அருளிப் பிரார்த்திக்க, முறிந்த தண்டு கூடிற்று. கண்டவர்கள் வியந்து போற்றி நின்றனர். ஒரு தொழு நோயாளியின் நோய நீங்க,

" வேத வனமறையோன் மெய்யுறு குட்டமதின்
வாதனையை நீக்கி மகிழுறவே - ஏதமிலாச்
செய்ய சடையானே பெருமானே ஏவர்க்கும்
ஐயமிலா திப்போ தருள் "

என்ற பாடலை அருளிச் செய்ய, நோய் நீங்கி அம்மறையவன் நலம் பெற்றான். மேலும், மதுரையில் ஐயபட்டர் என்பார்க்கு இழந்த கண்ணொளியை வழங்கியருளினார்கள். காசியில் பாம்பு தீண்டி இறந்த ஒருவனை உயிர்பெற்று எழச் செய்தார்கள். மக்கள் வேண்டுகோளுக்கு இணங்க மழை பெய்வித்தருளினார்கள்.

கமலை ஞானப்பிரகாசர் நூல்கள் :

கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் அருளிய நூல்கள் பல. இவர்கள் அருளிய தலபுராண நூல்கள் இரண்டு கிடைக்கப் பெற்றுள்ளன. ஒன்று திருமழபாடித் தலத்திற்குரியது 'திருமழுவாடிப் புராணம்' என இது வழங்கப் பெறுகிறது. 571 திருவிருத்தங்களையும், எட்டுச் சருக்கங்களையும் கொண்டது இந்நூல். திருவானைக்கா தலத்திற்குரிய 'தந்திவனப் புராணமும்' இவர்களால் இயற்றப்பெற்றதேயாகும். இது 14 சருக்கங்களையும், 571 திருவிருத்தங்களையும் கொண்டுஇலங்குகின்றது. இவ்விரு நூல்களும் முறையாக அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன. இவையன்றி, சைவ அனுட்டான அகவல், புட்பவிதி, பூமாலை, சிவபூஜை அகவல், பிராசாத மாலை, அத்துவித சாரம், சிவானந்த போதம், அத்துவாக் கட்டளை, அண்ணாமலைக் கோவை, ஆயிரப் பாடல், தியாகராசர் கழிநெடில், சாதி நூல், திருவாரூர்ப் பள்ளு முதலிய சாத்திர தோத்திர நூல்களும், தியாகராஜர் லீலை என்ற வடமொழிநூலும் இவர்களால்இயற்றப் பெற்றுள்ளன. இவற்றுள் பல கிடைக்கப் பெற்று அச்சிடப் பெற்றுள்ளன

ஞானப்பிரகாசர் துதி :

தருமை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞானசம்பந்தர், தம் ஞானாசிரியர் கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசரைத் துதித்துப் போற்றிய நூல் பண்டாரக் கவித்துறை என்பது. இந்நூல் ஞானப்பிரகாச மாலை என்றும் போற்றப் பெறுகிறது. கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் பரிபூரணம் எய்திய காலை ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருளிய கையறுநிலைப் பாடல்கள் நவரத்தினமாலை என்ற பெயரில் வழங்கி வருகிறது. இவர்கள் அருளிய சிவபோகசாரத்திலும் பல பாடல்கள் குருதோத்திரமாக விளங்குகின்றன.

" கிடந்தாலும் ஞானப்ர காசனென்பேன் கிடந்தே எழுந்து
படர்ந்தாலும் ஞானப்ர காசனென்பேன் பசியோடுபிணி
அடர்ந்தாலும் ஞானப்ர காசனென்பேன் அந்த அந்தகனார்
தொடர்ந்தாலும் ஞானப்ர காசனென்பேன் பினைச்
சொல்லிலையே "

எனவரும் ஞானப்பிரகாச மாலைப்பாடலும், இவை போல்வனவும் ஸ்ரீ ஞானப்பிரகாசரின் ஆசாரியத் திறத்திற்கு எடுத்துக் காட்டுகளாக விளங்குகின்றன.

25 ஆவது குருமூர்த்திகள் :

ஆதீன குருமுதல்வரின், ஞானாசிரியர் அருள் வரலாற்றில் சிலவற்றைச் சிந்தித்த நாம், இன்றைய குருமுதல்வரின் ஞானாசிரியராகத் திகழ்ந்த 25 ஆவது குருமூர்த்திகள் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் அளப்பரிய அருளறப்பணிகளில் சிலவற்றை, அவர்கள் குருபூஜைத் திருநாளை ஒட்டிச்சிந்திப்பது பெரிதும் பொருத்த முடையதாகவே அமைகின்றது. தருமை ஆதீன 25 ஆவது குருமூர்த்திகளாக கி. பி. 1945 மே மாத முதல் 1971 நவம்பர் வரை வீற்றிருந்த ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணிகளின் ஆட்சிக் காலம் ஆதீன வளர்ச்சி வரலாற்றின் பொற்காலங்களுள்ஒன்று. ஆதீனத்திருக்கோயில்கள் இருபத்தேழினையும், தம் அருளாட்சிக் காலத்தில் முறையாகப் புதுப்பித்துக் குடமுழுக்கு விழாக் கண்டார்கள். ஆதீனத் அடியவர்கள் தமிழ்க் கல்விபெற தருமை ஆதீன பல்கலைக் கல்லூரியைத் தோற்றுவித்தார்கள். திருக்குறள் உரைவளம், முதல் ஒன்பது திருமுறைகளுக்கான விரிவுரை நூல்கள் உள்ளிட்ட 562 நூல்கள் இவர்கள் ஆட்சிக் காலத்தில் வெளியிடப் பெற்றன. ஆதீனப் பணிகளை நாடறியச் செய்ய, சென்னையில் சமயப் பிரசார நிலையம் இவர்களால் அமைக்கப்பெற்றது. விரிவான சிவத்தலயாத்திரையை இந்திய நாடெங்கும் மேற்கொண்டார்கள்:

பன்முகப் பணிகள் :

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் வழங்கியருளிய அருளாசித் தொகுப்புகள் செந்தமிழ்ப் பூம்பொழில் என்ற பெயரில் நான்கு தொகுதிகளாக வெளிவந்துள்ளன. தருமையில் ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவியையும், வன துர்க்கையையும் பிரதிஷ்டை செய்தார்கள். ஆதீன குருமூர்த்திகளுள் பலருக்குக் குருமூர்த்த ஆலயங்களை அமைத்தார்கள். தமிழ்நாடு தெய்விகப் பேரவையைத் தோற்றுவித்து, அதன் தலைமைப் பொறுப்பினையும் ஏற்று, சைவ ஆதீனங்களின் அருறைப்பணிகளை ஒருங்கிணைத்தார்கள். பல்துறை அறிஞர்களைப் பாராட்டிப்பட்டமும், பட்டயங்களும் வழங்கினார்கள். சீகாழியிலும், திருவாரூரிலும் ஓதுவாமூர்த்திகளுக்குப் பட்டமளித்துப் பணமுடிப்புகளும் ஆண்டுதோறும் வழங்கினார்கள். காண்டற்கரிய கயிலைமால்வரைக்கு யாத்திரை மேற்கொண்டு கயிலாயநாதனைத் தரிசித்துக் கயிலாய பரம்பரை

என்பதற்குப் பெருமை சேர்த்தார்கள். அன்பர்களால் கனக அபிஷேகம் செய்விக்கப்பெற்றுக் கயிலைக் குருமணி எனக் கனிவோடு அழைக்கப் பெற்றார்கள். கி. பி. 1971 நவம்பர் 10 இல் ஸ்ரீ காசியில் பரிபூரணம் எய்தினார்கள்.

ஆரூரில் குருபூஜை :

தருமை ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

ஆதீன குருமுதல்வர்களையும், அவர்கள் தம் பெருமைகளையும் உலகோர் அறிந்து பயன் பெற வேண்டுமென்ற பெருவிருப்பம் கொண்டவர்கள். உமாபதி சிவத்திற்குப் பின்வந்த ஆதீன அருட்குரவர்களின் வாழ்வினையும், வாழ்விடங்களையும், அருள் நூல்களையும் தேடிக் காணும் அரிய முயற்சியை மேற்கொண்டு, திருவருளால் அம் முயற்சி கைகூடி வரப்பெற்றவர்கள். கமலை ஸ்ரீ ஞானப்பிரகாசர் குருபூஜை விழாவைத் திருவாரூருக்கு எழுந்தருளி, வழிபாடாற்றி, பல்வேறு அங்கங்களுடன் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிகழ்த்திவரும் குருமணிகள், இவ்வாண்டும் சுக்கில, ஐப்பசித் தேய்பிறை சஷ்டி கூடிய 20-10-89 வெள்ளிக் கிழமையன்று திருவாரூரில் மிகச் சிறப்பாக நிகழ்த்தத் திருவுளம் பாலித்துள்ளார்கள்.

தமது ஞானாசிரியர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் பரிபூரணம் எய்திய ஒரு ஆண்டுக்குள் ஸ்ரீ காசி விசுவேசர் ஆலய விமான அமைப்பில் அவர்களுக்குத் தருமையில் குருமூர்த்த ஆலயம் எடுப்பித்து, நாள்தோறும் வழிபடும் நியமமுடையவர்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் பத்தொன்பதாவது ஆண்டுக் குருபூஜைப் பெருவிழாவையும் சுக்கில, ஐப்பசித் தேய்பிறை அஷ்டமி கூடிய 22 10 89 ஞாயிற்றுக்கிழமை காலை மாலை இ வேளைகளிலும் தருமையிலும், ஸ்ரீ காசியிலும் மிகச் சிறப்பாகக் கொண்டாட அருள்பாலித்துள்ளார்கள்.

ஆதீன அன்பர்களும் சைவ மெய்யன்பர்களும் திருவாரூரில் நிகழவுள்ள கமலை ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக மூர்த்திகளின் குருபூஜை விழாவிலும், தருமையில் நிகழவுள்ள ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் குருபூஜை விழாவிலும் பங்கேற்று, வழிபட்டுக் குருவருளும் திருவருளும் பெற்று உய்யுமாறு ஞானசம்பந்தம் அன்புடன் அழைக்கிறது.

இருபெருங்குரவர் அருள்பெற வாரீர்!

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த

பரமாசாரிய சுவாமிகள்

தருமை ஆதீனத்தில் நடைபெற்ற

ஆவணிமூலப் பெருவிழாவில் வழங்கியருளிய

ஆசியுரை

9—9—1989

"பண்சுமந்த பாடல்பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண்சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்"

— மணிவாசகர்.

திருவிளையாடல் :

இன்று ஆவணி மூலத்திருநாள். இறைவன் பரிமேலழகனாய் வந்த பெருநாள். மணிவாசகருக்காக நரிகளைப் பரிகளாக்கிக் குதிரைச் சேவகனாக வந்து குதிரைகளை அரிமர்த்தன பாண்டிய மன்னனிடம் ஒப்புவித்த திருநாள். பரிகளை எல்லாம் நரிகளாக்கி மன்னனைக் கலக்கிய திருநாள். கலங்கிய மன்னன் அடுத்தநாள் மணிவாசகரைச்சுடுமணலில் நிறுத்தித் துன்புறுத்தினான். அடியவரின் இன்னல்களை ஆண்டவன் பொறுப்பானா? வைகை நதியில் பெரு வெள்ளம் விடுத்தான். கரையடைப்பதற்கு வந்தி என்னும் அம்மையின் அன்பிற்கு அடிமையாளாய் வந்தான். அவள் அன்பில் கட்டுண்டு அவள் தரும் பிட்டுண்டு கரையை அடைக்காது விளையாடினான். கலிமதுரையில் மண்சுமந்து அக்கோவால் மொத்துண்டு பொன் மேனியில் புண் சுமந்து கரையடைத்தான். இவையெல்லாம் அடியவர்களைக் கரையேற்றுவதற்காகஆண்டவன் செய்த திருவிளையாடல்கள்.

இன்பமும் துன்பமும் :

ஆண் அடியவராகிய மணிவாசகருக்கும், பெண் அடியவராகிய வந்தியம்மைக்கும் அருள் வழங்கிய திருநாளாக ஆவணிமூல விழாவைப் போற்றுகிறோம். சைவத்தில் இருபாலாரும் இறையருளைப் பெறுதற்கு உரியவர்களே என்பதை இது போன்ற வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. அடியவர்கள் துன்பப்படுவது போல் நமக்குத்தோன்றினாலும் அத்துன்பம் அவர்களுக்குத் துன்பமாகத் தோன்றாது. அவரவர் செய்த செயலின் (வினை) விளைவை (பயனை) அவரவரும் அனுபவித்தே ஆகவேண்டும். ஆனால் இறையருளில் தலைப்பட்ட மணிவாசகரைப் போன்ற அடியவர்களுக்கு வினைப்பயனாகி இன்பத் துன்பங்கள் வரினும் அவை உடலளவாய்க் கழியுமேயன்றி அவர் தம் உயிரைப் பாதிக்காது. அவ்வனுபவத்தைத்தான் மணிவாசகர் "நன்றே செய்வாய், பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகம்." என்கிறார்.

இன்பத் துன்பம் ஏன்?

மனிதன் வாழ்க்கையில் அலுப்புத் தட்டாமல் இருப்பதற்கு இன்பத்தையும், வாழ்வில் உயர்வதற்குத் துன்பத்தையும் படைத்துள்ளான். துன்பம் இரவு போன்றது. இன்பம் பகல் போன்றது. இதனைக் குருஞானசம்பந்தர்,

> " முப்பதும் சென்றால் விடியும், முப்பதும் சென்றால் இருளும்
> அப்படியே ஏதும் அறிநெஞ்சே "

என்று அறிவுறுத்துகின்றார். மணிவாசகருக்கு வந்த இடர்ப்பாடுகள் அனைத்தும் அவரைப் பிறவிக் கடலினின்றும் கரையேற்ற வந்தனவே. சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் என்றார் திருவள்ளுவரும். துன்பத்தை நோக்கித் துவளக்கூடாது. துன்பந்தான் நம்மை உயர்த்துவது. தக்க துணையாயிருப்பது. இன்பத்தை நோக்கி ஏங்கக் கூடாது. இன்பமே நமக்குப் பகை. உடனிருந்தே கொல்லும் வியாதி என்பதைப் போல் நம்மை அடுத்துக்கெடுப்பது இன்பம். இன்பத்துன்பங்களை சமமாகப் பாவிக்குந்தகுதி இடையறாது இறை உணர்வால் நமக்குப் உண்டாகும். மணிவாசகர் இந்நிலையில் இருந்துதான் "நன்றே செய்வாய், பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே" என்று பாடினார்.

இன்றும் வருவாரா இறைவன்? :

மணிவாசகருக்கும் வந்தியம்மைக்கும் அருள் செய்ய வந்த கடவுள் இன்றும் வந்து நமக்கு அருள் செய்வாரா? என்கிற ஐயப்பாடு பலருக்கும் எழும். இன்று அல்ல என்றுமே வருவார். தகுதியுடைய உயிர்களை ஈடேற்றம் செய்வதே அவர்வேலை. அவ்வேலையை அவர் எப்பொழுதும் இடையறாது செய்து வருகிறார்.

பொதுவாக அன்றுடம் நாம் உண்பதும், உழைப்பதும், உறங்குவதும் அவரால்தான் நடைபெறுகிறது இதனைநாம் நம் அறியாமையால் அறியாதிருக்கிறோம். சிறப்பாகச் சில அற்புதச் செயல்கள் நடப்பது எப்போதும் நடவாது. மணிவாசகர், ஞானசம்பந்தர் போன்ற தகுதியுடையோர் தோன்றும்போது அற்புதச் செயல்கள் நடக்கின்றன. நாமும் அவ்வரிசையில் இடம் பெறலாம். பெறுவதற்குத்தான் நாள்தோறும் இடையறாது கடமையைச் செய்கிறோம். வழிபடுகிறோம். கடமையும் வழிபாடும் தகுதியை உயர்த்துகிறது. தகுதி உயரும்போது மறைந்துநின்று அருள்செய்த இறைவன் வெளிப்பட்டு அருள்செய்கின்றான்.

இறைவன் என்றும் வரக்காத்திருக்கின்றார். அவர் எப்பொழுதும் தன் கடமையில் தவறுவதே இல்லை. அவர் கடமை தவருதவர் என்பதற்குச் சான்று வேண்டுமா? அவரால் இயக்கப் பெறும் நிலவும், சூரியனும் காலம் தவறுகிறதா? கடமை தவறுகிறதா? எனவே இறைவனும் கடமை தவருதவன் என்பதில் ஐயமில்லை. மாணிக்கவாசகரே பிறிதோர் இடத்தில், "மூல பண்டாரம் வழங்குகின்றான் வந்து முந்துமினே'' என்றறிவிச் செய்கின்றார் எனவே இன்றும் என்றும் இறைவன் அருள்வழங்கக் காத்திருக்கின்றான்; அதனைப் பெறுதற்குத் தடையாக உள்ள குறை எங்கே இருக்கின்றது எனில்? மாணிக்கவாசகர் போன்றும், வந்தியம்மை போன்றும், தகுதியை வளர்த்துக் கொள்ளாதகுறை நம்மிடையேதான் இருக்கின்றது. இக்குறையை எண்ணுவதும், இக்குறை நீங்கும் வண்ணம் வழி காண்பதும்தான் இவ்விழாவின் பயன்களாகும்.

பட்டம் பெறும் பண்பாளர் :

இந்நன்னாளில், இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம், பொருளாதாரம் முதலிய பலதுறைகளில் சிறந்த அறிஞர்களுக்குப் பட்டம்வழங்கிப் பொன்னாடைபோர்த்திச் சிறப்பித்து, அவர்களின் பணியினைப் பாராட்டுவது ஆதீன மரபாக இருந்து வருகிறது. அதன்படி, இவ்வாண்டுப் பட்டம் பெறுபவர், நமது ஆதீனத்தில் 60 ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ந்து பணியாற்றியதுடன் 35 ஆண்டுகட்கு மேலாகத் தலைமைக் கண்காணிப்பாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள மூதறிஞர், திரு. B. முத்துக்குமாரசாமி முதலியார் ஆவார்.

இவர், இந்த ஆதீனத்தில் பணியேற்ற முதல் 10 ஆண்டுக் காலத்தில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நேரத்திலும், பின்னரும் திறமையாகவும், உண்மையாகவும், நம்பிக்கையோடும் செயல்

புரிந்து திருமடத்தை நிர்வகித்தவர்களில் ஒருவர். மற்றும் திரு. இரத்தினம் பிள்ளை, திரு. கிருஷ்ண ஐயர் ஆகியோர் இவரோடு அக்காலத்தில் பணியாற்றிய பெருமைக்குரியவர்கள். பொதுவாக இளைஞர்களும் நடுத்தரவயதினரும் கிடைப்பதுஎளிது. ஆனால் வயதான அனுபவம் மிக்க தக்கார் கிடைப்பதுஅரிது. ஒரே இடத்தில் 60 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றித் தானும் வளர்ந்து, தான் சார்ந்துள்ள நிறுவனத்தையும் வளர்த்த 92 வயது முதியவர் இவர். பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்பதற்கேற்ப, ஆதீனத்தில் எல்லோரிடமும் எப்படிப் பழகுவது, எப்படிப் பேசுவது, நிர்வாகத்தில் ஏற்படும் சிக்கல்களை எப்படித் தீர்ப்பது என்பனவற்றைத் தெளிந்து தக்க வகையில் செயலாற்றியவர்; அதே நேரத்தில் அடக்கமே உருவானவர்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுள்ளம் அறிந்து, தக்க விஷயங்களைத் தனிலமயில் சமயம் பார்த்துத் தெரிவித்துப் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்கும் மனப்பக்குவம் பெற்றவர். இவரின் இத்தகைய அரிய பண்புகளையும் செயல் திறனையும் பாராட்டி, இன்று, சொக்கநாதப் பெருமான் திருவருளால் "ஆட்சிக் கலை வல்லுநர்" என்னும் பட்டம் வழங்கப் பெற்றுள்ளது. ஒவ்வொரு ஆணின் வளர்ச்சியிலும் ஒரு பெண்ணின் செயல் பின்புலமாக இருப்பது போன்று ஒவ்வொரு நிறுவனத்தின் வளர்ச்சியிலும் இவரைப் போன்ற வல்லுநர்களின் பணி பின்புலமாக அமைந்து இருக்கிறது என்பது எல்லா நிறுவனங்களுக்கும் ஒப்ப முடிந்த உண்மை. இன்றுள்ள இளைய தலைமுறையினர், இவரைப் போன்று தாம் சார்ந்து வாழும் நிறுவனத்திடத்து உண்மை விசுவாசமும் நம்பிக்கையும் கொண்டு செயல் புரிந்து, தாமும் வளர்ந்து வளம் பெற்று நிறுவனம் வளம் பெறவும் பணி புரிவார்களாக! நிறுவனத்தால் நாமும், நம்மால் நிறுவனமும் வளர்ந்து வளம் பெறுவதே இயற்கை நியதி.

வாழ்த்து :

இன்று பட்டம் பெறும் மூதறிஞர் நலமும் வளமும் பெற்று நூறாண்டு நன்கினிது வாழவும், இவ்விழாவில் பங்கு பற்றியுள்ள கல்வி நிறுவனத்தின் ஆசிரியர்களும் மாணவர்களும் ஆதீனப் பணியாளர்களும் எல்லா நலன்களும் பெற்று நீடுஇனிது வாழவும் ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்றேம்.

"நம்மால் நிறுவனமும் நிறுவனத்தால் நாமும் நலமுறுவோம்
அரசால் மக்களும் மக்களால் அரசும் வளமுறுவோம்."

ஸ்ரீ சபாபதிமூர்த்தி

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தியான சுலோகம்

ஏகாஸ்யந்து சதுர்புஜம் த்ரிநயநம் வாமேது துர்தூரகம்
சந்த்ரம்பத்ரசிகி ப்ரஸாரிதகரம் சோர்த்வம்பதம் குஞ்சிதம்
ஸவ்யேஸ்வஸ்திககுண்டலம டமருகம் கங்காபயேபிரதம்
வந்தே கீர்ணஜடம் நடேசமநிசம் ஹ்யபஸ்மார
தேஹேஸ்திதம்.

பொழிப்புரை :

ஒருமுகம் நான்கு கைகள் முக்கண் இவைகளை உடையவரும், தலையில் இடது பாகத்தில் ஊமத்தைப்பூ, சந்திரன் இவைகளை உடையவரும், இடது மேல் கையில் ஜ்வாலாக்னி உடையவரும், நீட்டிய கீழ்க்கையை உடையவரும், தூக்கிய இடது காலை உடையவரும், வலது பக்கத்தில் குண்டலம், உடுக்கை, அபயம் இவைகளை உடையவரும், தலையின் வலது பாகத்தில் கங்கையை உடையவரும் விரிந்த சடையை உடைவரும், அபஸ்மாரன் சரீரத்தில் ஊன்றியகாலை உடையவருமான ஸ்ரீ ஸபாபதிப் பெருமானை இடைவிடாது வணங்குகிறேன்.

விளக்கம் :

சிவபெருமாள் கொண்டருளிய திருக்கோலங்களில் சிறப்பு வாய்ந்தது நடராச மூர்த்தம். பெருமான் உயிர்களுக்குப் பெத்த முத்தியை அருளுதற் பொருட்டுத் திருவைந்தெழுத்தையே திருமேனியாகக் கொண்டு ஐந்தொழிலியற்றும் ஆனந்தக் கூத்தைப் புரியும் இத்திருவுருவச் சிறப்பை வியவாதவர் இல்லை எனலாம். எண்டோள் வீசி இறைவனியற்றும் ஆனந்தக் கூத்திற்குச் சிறப்பாக உரிய இடம் சிதம்பரத் தலமாகும்.

பஞ்சாக்ரமே வடிவாகி அப்பரமன் கொண்டருளிய திருக்கோலத்தை உண்மை விளக்கம்.

" ஆடும் படிகேள்நல் லம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லேநகரம் - கூடும்
வகரம் உதரம் வளர்தோள் சிகரம்
பகரும்முகம் வாமுடியப் பார். "

என்று கூறுகிறது. ஆனந்தக் கூத்தனது அ[illegible] ஊன நடனம் எனவும் ஞானநடனம் எனவும் இருவகையாகக் கூறுவர். நடராசப் பெருமான் மூன்று திருக்கரங்களாலும் இரண்டு திருவடிகளாலும் இயற்றும் ஐந்தொழிலை உலகைத் தொழிற் படுத்தற் பொருட்டாகக் கொள்வதை ஊன நடனம் எனவும், ஞானிகளுக்கு அவ்வைந்தொழிலால் அருள் செய்வதை ஞான நடனம் என்றும் கூறுவர். இவற்றை உண்மை விளக்கம் பின் வரும் செய்யுட்களால் தெரிவிக்கின்றது.

" தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்றதிரோ தமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு "

என்பது ஊன நடனத்தைக் குறிப்பது. இறைவனது துடியேந்திய கை உலகைப் படைத்தலையும், அபயமளிக்கும் கை காத்தலையும், அனல் ஏந்திய கைஅழித்தலையும், ஊன்றியதிருவடி மறைத்தலையும், எடுத்த பொற்பாதம் அருளலையும் புரிகின்றன என்று கொள்வது ஊன நடனமாகும்.

தன்னை வழிபடும் ஞானிகளின் மாயைதனைத் துடியேந்திய கை உதறுவதாகவும் அனலேந்திய கை அதனைச் சுடுவதாகவும் ஊன்றிய திருவடி ஆணவத்தை அழுத்துவதாகவும், எடுத்த திருவடி கருணையோடும் நேயத்தோடும் உயிரை ஆனந்தக்கடலில் அழுத்துவதாகவும் கொள்வது ஞான நடனமாகும்.

" மாயைதனை உதறி வல்வினையைச் சுட்டுமலம்
சாய அமுக்கியருள் தானெடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார்பரதம் தான் "

என்பன உண்மை விளக்கப் பாடல்கள். அநாதியாகவே உயிர்களைப்பந்தித்துள்ள பாசங்களைப் போக்கி அவைகட்கு முத்தியருளுதற் பொருட்டு அருள்வடிவான அம்பிகை அருகில் இருந்து அத்திரு நடனத்தைக் கண்டு மகிழ்வார். இத்திரு நடனத்தைச் சிதம்பரத் தலத்தில் பதஞ்சலி வியாக்கிரபாத முனிவர் காண இறைவன் காட்டியருளுகின்றார்.

பத்துக் கட்டளைகள்

' அட்வைசர் '

வளரும் குழந்தைக்குத் தாய்ப்பால் அவசியம். குழந்தைக்கு இயற்கை தந்த முதல் பரிசு தாய்ப்பால்தான்.

முதல் இரண்டு நாட்களில் வரும் பாலுக்குச் சீம்பால் என்று பெயர். இதில் புரதச்சத்துகள், வைட்டமின்கள், தாதுப் பொருட்கள், மற்றும் நோய் எதிர்ப்புச் சக்திகள் அதிகம் உள்ளன. இதை வீணாக்குவது சத்துள்ள உணவைக் கீழே கொட்டுவதற்குச் சமம். எனவே ஒவ்வொரு தாயும் குழந்தைக்குச் சீம்பால் அவசியம் புகட்ட வேண்டும்.

பசி எடுத்தால் குழந்தை அழும். நீங்கள் செய்ய வேண்டியது எல்லாம் குழந்தையை அணைத்து மார்பைச் சுவைக்கவிடுவதுதான்.

நிறையக்காய்ச்சல் மற்றும் காமாலை இருந்தால் பால்புகட்டக் கூடாது. குழந்தை நோய்வாய்ப்பட்டால் அவசியம் தாய்ப்பால் கொடுக்கவேண்டும். ஏனெனில் அதில் நோய்க்கிருமிகளை அழிக்கும் சக்தி உள்ளது.

மாதவிடாய் உள்ள போதும் கருவுற்று இருக்கும் போதும் தாய்ப்பால் புகட்டலாம். சிசேரியன் ஆபரேஷன் செய்துகொண்ட தாயும் தாய்ப்பால் கொடுக்கலாம்.

ஒவ்வொரு முறையும் குளிக்கும்போது மார்பகத்தை நன்கு கழுவவும்.

பேதியை உண்டாக்கும் கிருமிகளை வளரவிடாமல் தாய்ப்பால் தடுக்கிறது.

கருவுற்றிருக்கும்போது உடலில் கொழுப்புச் சத்து அதிகமாகிறது. இது தாய்ப்பால் கொடுப்பதால் கரைகிறது. இதனால் தாயின் அழகும் மேலும் கூடுகிறது.

தாய்ப்பாலில் நோய்த் தடுப்பு சக்தி அதிகமாக இருந்தாலும், குழந்தைக்குத் தடுப்பு ஊசி போடுவது அவசியம்.

ஆற அமர்ந்து தாய்ப்பால் பால் புகட்டுங்கள். வளரும் குழந்தையைக் கண்டு ஆனந்தம் அடையுங்கள். அது விளையாடுவதைக் கண்டு இன்புறுங்கள்.

— நன்றி தினமலர், திருச்சி - 1.

கலிய நாயனுர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ., பி.எட்.
தருமபுரம்

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 3—9—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

தருமைத் திருமடத்தில் ஆவணிமூலப் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பெறுகின்றது. விசேஷவழிபாடுகள், திருவிளையாடற் புராணத் தொடர் விரிவுரை, ஆதீனக்கல்வி நிலையங்களின் ஆண்டு விழா முதலிய அங்கங்களுடன் நடைபெறுகிறது. ஆவணிமூலப் பெருவிழாவில் முதல் ஞாயிறும் இணைந்தது! சிறந்தது! குருமணிகள் ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடாற்றி அன்பர்கட்குத் திருநீற்றுப் பிரசாதம் வழங்கிப் பண்டாரக் கட்டிற்கு எழுந்தருளினுர்கள். நியமமாக ஆற்றும் பன்னிரு திருமுறைப் பாராயணமும் ஆயிற்று.

அன்பர்கள் பண்டாரக் கட்டுச் சார்ந்தனர்; குருவருட் பிரசாதம் பெற்றணிந்து அமர்ந்தனர். திருமுறை ஓதிய பின் நாமாவளியை அடுத்துக் குருமணிகளின் அருளுபதேசம் தொடங்கிற்று.

அன்றைய முதல் நாள் மறைஞானசம்பந்தர் குருபூஜை. அந்நாளின் மறுநாள் விநாயகசதுர்த்தி. குருமணிகளின் ஆசாரியர்களின் அருட்கருணையை வரலாற்று விளக்கங்களுடன் அருளித் தோத்திரம் செய்தார்கள். இடையே உமாபதி சிவம் செய்தருளிய பஷ்கர பாஷ்யம் - சிவஞான முனிவர் செய்தருளிய சிவஞான மாபாஷ்யம் என்னும் இவை ஒன்றோடு ஒன்று ஒத்திருக்கும் நிலையை ஆய்வுப் பொருளாக வைத்தருளினுர்கள். தொடர்ந்து விநாயக சதுர்த்தி முதலிய திருநாட் பெருமைகளை அருளிக் கலியநாயனுர் புராண உபதேசம் செய்தருளினுர்கள்.

கலிய நாயனர் - கலிநீதி நாயனர் என்றும் குறிக்கப் பெறுகின்ருர். இவர் தொண்டை நாட்டுத் தலமாகிய திருஒற்றியூரில் வாழ்ந்தவர். செக்கார் மரபினர் - அதாவது எண்ணெய் ஆட்டும் மரபினர். திருவொற்றியூரில் இருந்த சக்கரப்பாடித் தெருவில் வாழ்ந்தவர். செக்கு இயந்திரம் சக்கரம் போலச் சுழல்வதால் எழும் ஓசையை உடைய தெரு என்பது இதன்பொருள். செக்கார் குலத்தில் தோன்றிய இவர் தம் அளவற்ற செல்வத்தைக் கொண்டு ஒற்றியூர்ப் படம் பக்தநாதர் திருக்கோயிலின் உள்ளும் புறமும் - இரவும் பகலும் திருவிளக்கு இடுகின்ற திருப்பணியை நியமமாகச் செய்து வரலானர்.

இறைவன், கலியநாயனரின் திருத்தொண்டு நெறியை உலகுக்கு எடுத்துக் காட்டும் வகையில் நினைந்தருளினர். கலியரின் பெருஞ்செல்வம் உயரும் நிலை நீங்கியது, வளம் சுருங்கத்தொடங்கிற்று சிவபுண்ணியச் செயல்களால் கலியரின் இருவினைகள் மாண்டு ஒழிவன போலவே செல்வமும் ஒழியத் தொடங்கிற்று எனச் சேக்கிழார் அருளிச் செய்கின்ருர். “மண்ணில் அவர் இருவினை போல் மாண்டது மாட்சிமைத்தாக” என்பது சேக்கிழார் திருவாக்கு.

செல்வம் அழிந்தாலும் சிந்தை தளராதவர் கலியர். திருப்பணி முட்டுப்படாதவாறு ஆற்றக் கருதினர். தம் மரபினராய் அவ்வூரில் வாழும் செல்வம் மிக்க செக்காரிடம் எண்ணெய் வாங்கிப் போய் விற்ருர். கிடைக்கும் ஊதியத்தால் விளக்கு இட்டார். நாளடைவில் செல்வர்கள் எண்ணெய் கொடாமையால், கூலிக்கு எண்ணெய் விற்கும் நிலையும் தடைப்பட்டது. தாம் அறிந்த தொழிலாகிய கூலிக்கு எண்ணெய் ஆட்டும் தொழிலை மேற்கொண்டார்; செக்கில் எருதுகளை ஓட்டும் தொழிலும் புரிந்தார். கூலி கொண்டு திருவிளக்குத் திருப்பணி புரிந்தருளினர். கூலிக்குத் தொழில் செய்வோர் தொகை பெருகிற்று. வருவாய் முட்டுப்பட்டது.

வளஞ் சுருங்கினும் மனஞ் சுருங்காத கலியர் தாம் வாழும் வீட்டை விற்ருர் திருவிளக்கு இட்டார். அப்பொருளும் தீர்ந்தது. தம் உடைமையாகிய மனையாளை அடிமையாக விற்றுப் பொருள் பெற்று விளக்கிடக் கருதினர். ஒற்றியூர் முழுதும் அழைத்துச் சென்று விலை கூறினர். பொருள் கொடுத்து வாங்குவாரிலர் - இஃது இறைவன் திருவுள்ளம். யாது செய்வேன்? எனக் கவன்ருர். திருவிளக்குப் பணி முட்டுப்படலாகாதே எனவருந்தினர்; செயலற்றுப்போனர்.

ஒற்றியூர்ப் படம்பக்கநாதர் திருக்கோயில் சார்ந்தார். திருவிளக்கு ஏற்றும் சமயம் வந்தது. எண்ணெயோ இல்லை! "அடியேன் மாள்வதே தக்கது" எனத்துணிந்தார். விளக்குகட்குத் திரியிட்டார். அகல்களைப் பரப்பினார். எண்ணெய்க்குப் பதிலாக உடலில் உள்ள குருதியையே வார்க்கக் கருதினார்; கருவியை எடுத்தார்; தம்கழுத்தை அரிந்துகொண்டார் - என்னே அவர்தம் திருத்தொண்டின் உறைப்பு! இறைவன்வெளிப்பட்டார்; கழுத்தை அரியும் கையைப்பிடித்துக்கொண்டார்; பின்னர் இடபஆருடராய் வெளிப்பட்டுக் காட்சி நல்கினார். கழுத்தில் அரிந்து கொண்டமையால் நேர்ந்த ஊறு நீங்கினார் கலியர். இறையருள் பெற்ற கலியர் சாலோக முத்திப் பேறு பெற்றார் - இது புராண வரலாறு.

வரலாற்றின் இடையிடையே குருமணிகள் பல அரியகருத்துக்களை நாமுய்ய அருளிச்செய்தார்கள். கலியநாயனார், திருவிளக்குப் பணி முட்டு நேர்ந்த போது தம் உடலில் உள்ள குருதியைக் கொண்டு அகல் நிரப்பக் கருதிக் கழுத்தை அரிய முற்பட்டார். இதனைக் குறிப்பிட்டு உயிர்க்கு உறுதி பயக்கும் வினை மேற்கொள்ளும் போது அதற்கு இடையூறு நேரிட்டால் உயிரைப் பாதுகாத்துப் பயன் இல்லை; செயல் ஒழுக்கம் உயிரை விட மேலானது. வள்ளுவர்,

" ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் "

என்று அருளினார் - இங்ஙனம் நெறிவிளக்கம் உணர்த்தினார்கள்.

மேலும் கலியநாயனார் தொண்டு முட்டின்றி நியமமாகத் திருவிளக்கிடுதல் என்னும் திருப்பணி. திருவிளக்கிடுதல் மெய்ஞ் ஞானத்தை நல்கும் சரியைத் தொண்டு. "விளக்கிட்டார்ப் பேறு சொல்லின் மெய்ந்நெறி ஞானமாகும்" என்பது அப்பர் அருள்வாக்கு. இறைவன் சோதி வடிவினன். சோதி வடிவாகிய—நெருப்பு ஆக விளங்குகின்ற பெருமானை உள்கி உக்ந்து, உருகி நைபவர் உள்ளம் குளிரும். விரும்பிநல் விளக்குத்தூபம் விதியினால் இடவல்லார்க்குக் கரும்பினில் கட்டியாக இருப்பான் இறைவன். இங்ஙனம் தத்துவச் செறிவு பொருந்திய பகுதிகளைச் சுட்டிப் புலப்படுத்தி நெறிப்படுத்தினார்கள். மேலும் நியமமாகச் செய்யும் திருத்தொண்டின் பெருமையை உலகிற்குப் புலப்படுத்தி அருள் வழங்குவது இறைவனின் இனிய கருணை; இதனை நாயன்மார்கள் வரலாறுகள் எடுத்துக்காட்டுகின்றன. அவரவரும் தத்தமக்கு என இறைவன் வகுத்தளித்த வாழ்க்கை அமைப்பைக் கொண்டே

திருத்தொண்டு புரியலாம். இறைவன் எளியவர்க்கு இரங்குபவன்; பிட்டு வாணிச்சியாகிய வந்தியின் நிலை கண்டு அவள் வேண்டு கோட்கு இரங்கி மண் சுமந்து – புண் சுமந்தான் இறைவன். கலிய நாயனார் செல்வம் இழந்து வறுமையுற்றகாலத்தும் குலத்துக்கேற்ற தொண்டு நெறி பிறழாது வாழ்ந்து இறையருள் பெற்றார் - இங்ஙனம் சிந்தனைக்கு விருந்து நல்கி அருளுபதேசம் நிறைவித் தார்கள்.

பண்டாரக்கட்டின் திருவாயிற்புறத்தே இன்சுவைக் கனிச் சா காத்திருந்தது. பருகி மகிழ்ந்தோம். இனிய சிந்தனை ஏந்தி இல்லம் ஏகினோம்.

" நெறிபிறழா நியமத்தர் நீள்புகழார் கலியர்திறம்
உரைசெய்த குருமணிதாள் உவந்தேத்திப் பணிந்திடுவோம் ! "

வாழ்க குருமணிகள் !

ஸ்ரீலஸ்ரீ குருமணியின் அருள்மொழி

கடவுள் வழிபாடு

நல்வினை உடையவர்களே கடவுளை உணர்ந்து பக்தி செய்வர். தீவினை உடையவர்கள் கடவுளை வழிபடமாட்டார்கள். அவர்கள் வழிபட நினைத்தாலும் அவர்கள் வினை அவர்களை எவ்வாறேனும் தடுக்கும். "கொடுவினையார் என்றும் குறுகா அடி" என்று கூறி அருள்கின்றார் அப்பர். சுந்தரர் வடதிருமுல்லைவாயில் திருப்பதிகத்தில் அன்றும் இன்றும் என்றும் நல்லவர்களுக்கே கடவுளை வழிபடும் வாய்ப்புக் கிடைக்கும் என்னும் பொருளில்,

" என்றும் நல்லவர் பரவும் திருமுல்லை வாயிலாய் "

என்று பாடியருளுகின்றார். குமரகுருபர முனிவர், "அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்கு ஏற்றும் விளக்கே" என்று மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழில் குறிப்பிடுகின்றார். நாடோறும் மக்கள் தங்களுக்கு இயன்ற ஏதாவது ஒருவேளையில் திருக்கோயில் வழிபாடு செய்யவேண்டும்.

கட்டுரை எண். 21.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

மந்திர வடிவம் :

அத்துவா வடிவங்கள் ஆறனுள்ளே மந்திர வடிவமே மிக்கது என்று வேதாகமங்கள் கூறுகின்றனவே, இதற்குக்காரணம் என்ன? என்று அடுத்து விளக்குகின்றார் அருள்நந்தி சிவாசாரியர். இம் மந்திரங்கள், சிவசக்திசேர்ந்து நிற்கும் சுத்தமாயையிலே தோன்றிய காரணத்தாலும் சிவசத்தியால் அதிட்டிக்கப்பட்டுச் சாதகருக்குப் போக மோக்ஷங்கள் கொடுத்தலாலும் முதல்வனுக்குவடிவம் என்று வேதாகமங்கள் கூறுகின்றன. இதுவும் உபசாரவழக்கே ஆம்.

மந்திரங்களுள்ளே ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம், இருதயம், சிரசு, சிகை, துவசம், நேத்திரம், அத்திரம் என்னும் பதினொன்றும் முக்கிய மந்திரங்களாம். இவை முதல்வனாய சதாசிவமூர்த்தியுடைய சுவரூபம் என்றும் பிரிவின்றி யிருக்கும் சக்திகள் என்றும் சொல்லப்படும். இக்கருத்துக்களை, உள்ளடக்கிய பாடல்களைக் கீழே காண்போம்.

"மந்திரம் அத்துவாவின் மிகுத்து இருவடிவமாகத்
தந்தது ஏன்? அரனுக்கு என்னில் சகத்தினுக்கு உபாதானங்கள்
விந்து மோகினி மான் மூன்றும் இவற்றின் மேலாகி விந்துச்
சிந்தை யாதீதமான சிவசத்தி சேர்ந்து நிற்கும்"

"சுத்தமாம் விந்துத் தன்னில் தோன்றிய ஆதலாலும்
சத்திதான் பிரேரித்துப்பின் தான் அதிட்டித்துக் கொண்டே
அத்தினால் புத்தி முத்தி அளித்தலால் அரனுக்கென்றே
வைத்தவா மந்திரங்கள் வடிவென மறைகள் எல்லாம்"

பஞ்ச மந்திரம் :

மேலே சொல்லியுள்ள பதினொரு மந்திரங்களுள்வே ஈசானம் முதலிய ஐந்து மந்திரங்களைப் பற்றி இனி விளக்குகின்றார். ஈசானம் முதலிய ஐந்து மந்திரங்களும் ஏனைய மந்திரங்களுக்கெல்லாம்

முன்னர்த் தோன்றின ஆதலாலும் அவற்றிற்குக் காரணமாயிருத்தலாலும் அவை முதல்வனுக்கு வடிவாகக் கூறப்பட்டன. ஈசானம் - சிரசு; தற்புருடம் - முகம்; அகோரம் - இருதயம்; வாமதேவம் - இரகசியம்; சத்தியோசாதம் - பாதம். இவை பஞ்சப் பிரமம் எனப்படும்.

" மந்திரம் அதனில் பஞ்ச மந்திரம் வடிவமாகத்
தந்திரம் சொன்ன வாறு இங்குஎன்னில் சாற்றக் கேள் நீ
முந்திய தோற்றத்தாலும் மந்திர மூலத்தாலும்
அந்தமில் சத்தியாதிக்கு இசைத்தலும் ஆகும் அன்றே "

என்னும் பாடல் அக்கருத்தை விளக்குகிறது.

ஐந்து மந்திரம் - பெயர் விளக்கம் :

இவ்ஐந்து பற்றிய விளக்கங்களைச் சிறிது காணலாம். ஈசானம் - உலகம் எல்லாவற்றையும் ஆளுதல் செய்து அருள்செய்வது என்பது பொருள். ஈச் - ஆளுதல். ஆன என்பது விகுதி. தற்புருடம் - தேவ சரீரம், மனித சரீரம் முதலிய அந்தந்தச் சரீரங்களிலே அதிட்டித்து நிற்பது. தத் - அந்த; புருடம் - புரத்திலிருப்பது; அதாவது புரம் - சரீரம் எனப்படும். அகோரம் - சாந்தமாயிருப்பது; கோரம் - கடுமை; அ - இன்மை; வாமதேவம் - அறம் பொருள் இன்பங்களை ஆன்மாக்களுக்குக் கொடுக்கும் ஒளிமயமானது. வாமம் - அறம் பொருள் இன்பம்; தேவம் - ஒளியுடையது. சத்தியோசாதம் - உடம்பை உயிர்களுக்கு உடனே தோற்றுவிப்பது. சத்திய - உடனே சாதம் - பிறப்பு.

சடங்க மந்திரம் !

பதினொரு மந்திரங்களுக்குள்ளே இவ்ஐந்து தவிர எஞ்சியவற்றில் இருதயம், ஞானம் என்றும், சிரசு, மிக்க உயர்ச்சி என்றும் சிகை, தன்வயமுடைமை என்றும் கவசம், காத்தல் என்றும் நேத்திரம், எல்லாம் அறிகை என்றும் அத்திரம், தாங்குதலுக்குரிய பிரதயம் என்றும் கூறப்பெறுகின்றன. இருதயம் முதலியவைகளுக்கு இருதயம் முதலிய அங்கங்கள் உறுவாருமுளர். அதனால் இருதயம் முதலியன சடங்க மந்திரம் எனவும் கூறப்படும். சட் + அங்கம் = சடங்கம். சட் - ஆறு என ஆகும்.

ஐவரை அதிட்டித்து நின்றருளும் சக்தி :

இனி, பிரமா, திருமால் ஆகியோரையும் அதிட்டித்து நின்ற இறைவனது சத்தி ஐந்தொழில்களையும் செய்யும் என்பதை விளக்குகின்றார்.

பிரம, விஷ்ணு உருத்திரர்களிடத்து முதல்வனது சத்தினி பதிந்து நின்று செலுத்துவதால் அவர்களின் உருவங்கள் முதல்வன் உருவோடு ஒப்பவைத்துக் கூறப்பெறுகின்றன. அவ்வாறு சத்தினால் செலுத்தப்படாது, பிரமன் முதலியோரே படைப்பாதி தொழில்களைச் செய்வர் என்று சொல்லின் முதல்வன் வேண்டுவதில்லை; ஆதலால்முதல்வனே ஐந்தொழிலும்செய்வான். அவனது சத்தியினால் அதிட்டிக்கப்பட்டுப் பிரமன் முதலியோர் ஒவ்வொரு தொழிலைச் செய்வர் என்பது கருத்து.

" அயன்தனை ஆதியாக அரன்உரு என்பதென்னை
பயந்திடும் சத்தியாதி பதிதலால் படைப்புமுலம்
முயன்றனம் இவரே ஆயின் முன்னவன் என்னை முற்றும்
நயந்திடும் அவன் இவர்க்கு நண்ணுவது ஒரோஒன்றுமே "

என்னும் பாடலால் மேற்கூறும் கருத்துக்கள் நன்கு விளக்கம் பெறுகின்றன.

(தொடரும்)

பார்வையாளர் குறிப்பு (நகல்)

தருமபுர ஆதீனம்

ஸ்ரீ கம்பகரேஸ்வர சுவாமி தேவஸ்தானம், திருபுவனம்.

இன்று இந்த அருள்மிகு சரபேஸ்வரர் திருக்கோவிலில் வழிபடும் பெரும்பாக்யம் எனக்கும், என் குடும்பத்தாருக்கும் கிட்டியது. ஆலயம் மிகநன்முறையில் பராமரிக்கப்படுகிறது. ஆலய சிப்பந்திகளும், சூப்ரண்டு திரு. ரெகுபதி முதலியார் அவர்களும், ஷராப் திரு. ராசு முதலியார் அவர்களும் வழிபாட்டுக்கு உறுதுணையாக இருந்து அன்பாக உபசரித்தது பெருமைக்குரியது. இத்திருக்கோவில் தருமை ஆதீனத்தைச் சார்ந்தது என்பதை அறிய மேலும் மனம் சந்தோஷமடைகிறது. ஏனெனில் திருக்கோவில் பராமரிப்பும், பூஜை வழிபாடுகளும், உபசரிப்பும் அவ்வாறு எண்ணவைக்கிறது.

(ஒ-ம்) டி எஸ். சங்கரநாராயணன், பி. ஏ., பி. எல்.,
மாவட்ட நீதிபதி.

7—10—89.

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். ஃபில்.,
தருமபுரம்.

(மலர் 48, இதழ் 10, பக்கம் 536 இன் தொடர்ச்சி)

காமத்தை அடக்கிய கோபம் :

ஒரு உணர்வு மேலோங்கும் போது இயல்பாகவே பிறவுணர்வுகள் அடங்கித்தான் போகும். நெருஞ்சியின் முள் முனைகளில் ஒன்று மேல் நோக்குமானால் ஏனையவை இரண்டும் இடது வலது பக்கமாகச் சாய்ந்து இருக்குமாறு போல, சத்துவ, ராஜஸ, தாமஸ குணங்களில் ஒன்று மேலோங்க ஏனையவை சாய்ந்து வலிகுன்றி நிற்கும்.

காந்தர்வதத்தையை வீணையில் வென்று பெற்ற சீவகன் பகையரசர்களின் வெறுப்புக்குப் பாத்திரமானான். போர்ப்பறை முழங்க- அனைவரும் ஒன்று சேர்ந்து சீவகனை எதிர்த்தனர். காற்றால் புடைக்கப்பட்ட கடல்போலச் சேனை கலங்கியது. தன்கையிலிருந்த வீணையைச் சீவகன் நீக்கிவிட்டுத் தத்தையைப் பார்த்து, "நின்னுடைய கண்கள் போல் பாயும் அம்புகளை அரசர் கூட்டம் வேண்டி நின்றது – நீ வருந்தாதே" என்று கூறித் தேற்றினான்.

..................................நின கண்கள் போல
ஆய்ந்த அப்பினுக் காரிரை யாகிய
வேந்தர் வேண்டிநின் றூர்விம்மல் நீயென்றான். (சிந். 759.)

அந்த நேரம் வீரம் மிக்கெழவே காமம் அடங்கிப் போயிற்று. கம்பர் இதனை அப்படியே ஏற்றுக் கொண்டார். ஒரு சுவை மற்றொரு சுவையை அழிக்கும் என்பதை இராவணனை வைத்துக் காட்டுகிறார்.

சீதை தன் எண்ணத்துக்கு இணங்காமல் போகவே சீற்றம் சீறியெழுந்தது இராவணனுக்கு என்றார் கம்பர்.

காமன், தன்திறத்தையும் கடந்தது
சீற்றத்தின் தகைமை. (கம். 5205.)

கண்ணீர் அருவி :

கண்கள் புயலைப் பொழியவே பெருகிய வெள்ளம் முலைத்தடம் கடந்து நடந்தது என்று வருணிப்பார் திருத்தக்க தேவர்.

தொடித்தோள் வளைநெகிழத் தொய்யின் முலைமேல்
வடிக்கேழ் மலர்நெடுங்கண் வார்புயலுங் காலும். (சிந்: 2049.)

இன்னொரு இடம் - அனைவரையும் தன்பொருட்டாக வன்றே பகை யாக்கிக் கொண்டான் என்று தந்தை சீவகனை நினைந்து வருந்தினள்.

கண்ணின் நீர் முலைபாயக் கலங்கினள். (சிந். 760.)

கம்பர் சீதையின் துயரத்தை இதே அமைப்பில் காட்டுகிறார். முலையென்ற மலை யேறிநின்று கொட்டும் அருவி இடையென்ற கடலில் சங்கமித்தது என்கிறார்.

தழைத்த பொன்முலைத் தடங்கடந்து
அருவி போய்த்தாழ. (கம். 5074.)

கண்ணின்நீர் கடல் புகக் கலுழ்வாள். (கம். 5075.)

தேர்க்காலை வீரர் காத்தல் :

போர்க் காலத்தில் வீரர்கள் யானை குதிரைகளில் ஏறிச்சென்று போருடற்றும் போது தேரில் செல்லும் வீரர்கள் அதன் சக்கரப் பகுதியைக் காத்து வருமாறு சில வீரர்களை ஏவுதல் செய்வார்கள்.

பெரும்பாணாற்றுப் படையில் உப்புவாணிகர்கள் கைக்குழந்தை யுடன் கூடிய மகளிரை வண்டியோட்டச் செய்து - சக்கரத்தினைத் தாங்கள் காத்துச் செல்வதாகக் குறிக்கப்பட்டுள்ளது.

மகவுடை மகடூஉப் பகடுபுறம் தூரப்ப
....
படலைக் கண்ணிப் பரேர் எறுழ்த் திணிதோள்
முடலை யாக்கை முழுவலி மாக்கள்
சிறுதுளைக் கொடுநுகம் நெறிபட நிரைத்த
பெருங்கயிற் றொழுகை மருங்கில் காப்ப. (58-63.)

சிந்தாமணியில் வட்டுடைபூண்ட சீவகன் வாட்களை இருமருங்கிலும் கட்டிக் கொண்டுத் தனஞ்சயனைப் போலத் (அர்ச்சுனன்) தேரேறினன்.

கட்டளைப் புரவி சூழ்ந்து காலபுடை காப்ப. (சிந் 767.)

எவினுள் என வரும். கம்பர் இதனை மனத்தில் கொண்டு இப்படியே வருணிக்கிறார். இந்திரசித்து போர்க் கோலங் கொண்டு களம்புக்க போது,

தூமக்கண் அரக்கனும் தொல்லமர் யார்குந்தோலா
மாபக்கனும் அந்நெடுந்தேர் மணி ஆழிகாக்க. (கம். 3026.)

வந்தனர் என்றார். போர்முறைப் பாதுகாப்பைச் சிந்தாமணி வழியிலேயே காட்டினார்.

சுற்றிச் சுழலும் குதிரை மறம் :

போர்ப்படைகளிலேயே அதிவேக முடையது குதிரைப் படை தான். அதனை இடவல சாரியாகச் சுழலச் செய்து அதில் ஆரோகணிக்கும் வீரன் தானும் வாளைச் சுழற்றிப் போர் புரிவான். போர்க் குதிரைகளின் சுழற்சிக்குச் சிந்தாமணி ஆசிரியர் மட்கலம் வனையும் சக்கரத்தை உவமை கூறினார்.

கூட்டுற முடுக்கிவிட்ட குயமகன் திகிரிபோல்
வாட்டிறல் தேவதத்தன் கலிமா ...... திரியுமன்றே. (சிந். 786.)

என்பது சிந்தாமணி.

கம்பர் இதே அமைப்பில் இராமாயணக் காட்சியை அமைக்கிறார். மிதிலை மாநகர் நோக்கி வரும் போது போர்ப்பயிற்சியில் ஈடுபட்ட குதிரைகள் அதிவேகமாகப் போவதைக்காட்சியாக்குகிறார்.

அம்புகள் போல் விரைந்தும் - குயமகன் திகிரிபோல் சுழன்றும் பாய்கின்றன. மேலோர் நட்புப்போல இடையறவின்றி ஒன்றை ஒன்று தொடர்ந்தும் வருகின்றன. மிக அழகிய அக்காட்சியில் சிந்தாமணி உவமை அப்படியே இடம் பெற்றது.

கொட்புறு கலினப் பாய்மா குலால் மகன் முடுக்கிவிட்ட
மட்கலத் திகிரிபோல வாளியின் வருவ மேலோர்
நட்பினின் இடையறுவாய் ஞானிகள் உணர்வின் ஒன்றாய்
கட்புலத்து இனைய என்று தெரிவில திரியக் கண்டார்.
(கம். 491.)

இலக்கிய நயம் காணும் அன்பர்கள் அக்கரு எங்கிருந்துகிடைத்தது என்பதையும் கண்டு சுவைக்கலாமல்லவா!

(வளரும்)

விதியும் மதியும்

திரு. சொ. சிவதாணு
வடசேரி

துணிவோடும், தன்னம்பிக்கையோடும் செயற்கரிய பணிகளில் ஈடுபடும் நமக்குச் சில சமயங்களில் எதிர்ப்புச் சக்தியாக விதிசெயல் படுவதுண்டு. ஆனாலும் நல்ல விதி இருந்தால் நாம் உற்சாகமாக வாழலாம்.

" எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கிபொரு வார்த்தைபேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீர் ஆறெல்லாம் அதிலோர் எழுத்தை
அழித்திடுமோ? "

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை விதியின் வல்லாண்மையைப் பரக்கப் பேசுகின்றார். அனுகூலமான நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்வதும் விதிதான். அனுகூலமற்றவைகளில் கொண்டு போய்த் தள்ளி விடுவதும் விதி தான். வலுவும் நலிவும் விதியின் கையில் இருக்கின்றது. நலிவுறும் போது விதியை யாரே எதிர் வெல்வார்? 'புத்தியால் புகல்கின்றேற்கும் ஆவதை யாவிற்றில்லை. யார் விதி வினையை யோர்வார்? 'வெஞ்சின விதியை வெல்ல வல்லமோ? என்றெல்லாம் கவிச் சக்கரவர்த்தி கம்பர் சில இடங்களில் சொல்லிச் சென்றுள்ளார். கம்பனைப் போலவே அறிவிற்சிறந்த அவ்வைப் பெருமாட்டியும்

" ஆழ வமுக்கி முகக்கினு மாழ்கடல்நீர்
நாழி முகவாது நானாழி — தோழி
நிதியுங் கணவனு நேர்படினுந் தந்தம்
விதியின் பயனே பயன். "

என்று சொல்லியுள்ளார். ஆகவே எல்லாப் பொருளும் கிடைத்தாலும், ஊழினையேயன்றி அதிகமாக யாரும் அனுபவிக்க முடியாது.

"எழுதியவா றேகா ணிரங்குமட நெஞ்சே
கருதியவா றாமோ கருமம் — கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்கா யீந்ததேல்
முற்பவத்திற் செய்த வினை."

என்பது வாக்குண்டாம். முற்பவத்தில் செய்த வினைதான் விதியின் செயற்பாட்டிற்குக் காரணம் என்பதை அவ்வை நல்லுய்த் தான் சொல்லியிருக்கின்றார். ஆகவே ஊழின்படி யன்றி செய்தொழில்கள் அவரவர் நினைத்தபடி முடியாது. 'அவரவர் வினைவழி அவரவர் அநுபவம்'' என்பது குருஞானசம்பந்தர் திருவாக்கு.

மனிதன், பொதுவாக மனத்தின் விகாரத்திற்கு ஒப்ப ஞானமும் அதற்கேற்ப கர்மம் - தர்மம் அல்லது அதர்மம் செய்கின்றான். எந்த வித்து விதைக்கப்படுகின்றதோ அதற்கேற்பவே பலன் ஏற்படுகின்றது. வினை விதைத்தவன் வினையும் தினை விதைத்தவன் தினையும் அறுவடை செய்கின்றான்.

இவற்றிலிருந்து ஒவ்வொருவரும் அவரவர் விதிக்கு அவரவர் தான் காரணம் என்பதைத் தெரிந்து கொள்ள முடியும். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்' என்று கடவுளைச் சொல்வார்கள். அவன் வினையை வகுத்து மக்களுக்கு ஊட்டுதல் செய்வதனால் அவனை 'வகுத்தான்' என்ற சொல்லால் குறித்தார் வள்ளுவர். இந்திர ஜாலம் புரிவோன் யாவரையும் தான்மயக்கும் சூத்திரத்தில் தான் சாராது சார்வது போல் வினையையும் மாயையும் சேர்ப்பித்து எல்லோருக்கும் வாழ்க்கையை அமைத்துத் தருகின்றவன் கடவுள். அவனுக்கு நின்மலன் என்ற பேருண்டு. 'நிறங்கொள் கண்டத்து நின்மலன் எம்மிறை' என்றார் அப்பர் பெருமான்.

"இன்ப மும்பிறப் பும்மிறப் பின்னொடு
துன்ப முப்முட னேவைத்த சோதியான்"

என்றே அப்பர் கூறுகின்றார். மாயைக்கும் அவனுக்கும் தொடர்பில்லை ஆண்டவனை ஒரு நிமிடம் மறந்தாலும் மாயை பற்றி விடும். பிரார்த்தனை ஒன்றே ஆன்மாவின் தூய்மை. கடவுளைப் போற்றுவதும் வணங்குவதும் தியானம் செய்வதும் சுயத்தூய்மையை அடைவதும் தான் பிரார்த்தனை.

குமரகுருபர சுவாமிகள் தம் நீதி நெறி விளக்கத்தில் சொல்லியிருக்கின்ற இரண்டு பாடல்கள் இங்குக் கவனிக்கத் தக்கன.

" தெய்வ முளதென்பார் தீய செயப்புகிற்
தெய்வமே கண்ணின்று நின்றொறுக்கும் — தெய்வம்
இலதென்பார்க் கில்லைத்த மின்புதல்வர்க் கேற
பலகாலுஞ் சொல்வார் பயன். "

" வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் — வஞ்சித்த
எங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கங் குலைவ தறிவு "

இரண்டாவது பாடல் திருமூலர் பாடல் ஒன்றை நினைப்பிக்குது.

" கண்காணியில் லென்று கள்ளம் பல செய்வார்
கண்காணி யில்லாத இடமில்லை காணுங்கால்
கண்காணியாகி கலந்தெங்கும் நின்றானைக்
கண்காணி கண்டார் களவொழிந்தாரே "

என்று திருமூலர் சொல்கின்றார். இதுதான் மதி. கடவுளிடம் மனம் விட்டுத்தன் தவறுகளைச் சொல்லி வருந்தித்திருந்தப் பிரார்த்தனை ஒன்றேவழி. நமது தினசரிநடவடிக்கைகளில் ஒழுங்கும் அமைதியும் நிலவச்செய்ய பிரார்த்தனை அவசியம் என்றுணர்வது மதி. ஆகவே மதியினால் விதியை வெல்ல முடியும். இதைத்தான் அவ்வையார்,

" சிவாய நம வென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளு மில்லை "

என்றும்,

" உபாயம் இதுவே ஆகும் அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும் "

என்றும் அழுத்தம் திருத்தமாகச் சொல்கின்றார். மதி என்பது இறைவன் நினைப்புள்ளவர்களுக்கு அனுசாரணையாகப் போகின்றது. அதாவது அந்த மதி அவனைப் பக்தி மார்க்கத்தில் கொண்டு போய்ச்சேர்த்துவிடுகின்றது. அவனன்றி வேறொன்றும்பொருட்டாக நினையாதவாறு செய்து அவனிடம் அடைக்கலம் புகுவிக்கின்றது. சரணாகதி அடைந்து விட்டால் விதி ஒன்றுமே செய்யமுடியாது - சுந்தரர் தேவாரத்தில்.

" அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்தன் ஆருயிரதனை வவ்வினுய்க்கு உன்றன் வன்மை கண்டு அடியேன்
எந்தை நீயெனை நமன் தமர் நலியில் இவன் மற்றென் அடியான் என விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடியடைந்தேன் "

என்று சொல்கின்றார். ஆகவே மதியானது இறைவனைச் சரணாகதி அடைய நினைத்தால் விதியை வெல்லும். ஆன்மீகத்தில் நாட்டமும் இறைவிடத்தில் தேட்டமும் கூட்டுகின்ற மதியால் எதையும் வெல்ல முடியும். அந்த மதியைத் தான் உடைமையில் எல்லாம் உன்னத மானது என்று சொல்கின்றோம். அத்தகைய மதியைத் தந்தவன் இறைவன்.

மனிதனும் அவனுடைய வினையும் தான் உண்மையில் அவனவன் விதி. விதிக்கும் மனிதனுக்கும் இடையே ஏற்படுத்தப் படுகின்ற உறவே வாழ்க்கை. போராட்டம் நிரம்பியது வாழ்க்கை. போராட்டத்தைத் தவிர்க்க இறைவன் மதியைத் தந்துள்ளான் 'ஊழின் மலி வினை போயிடல்' பாச நீக்கம் எனப்படும்.

" தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையுமாட் கொள்வார்
ஆடிப்பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப்போம் நமதுள்ள வினைகளே "

என்பது திருநாவுக்கரசர் திருவாக்கு.

" பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றி நின்ற சூழ் வினைகள் வீழ்க்க வேண்டில்
சொல்லுகேன் கேள் நெஞ்சே துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே என்றும்
உன்னையல்லாது ஒருதெய்வம் உள்கேனென்றும்
புற்றரவக் கச்சார்த்த புனிதாவென்றும்
பொழில் ஆரூரா என்றே போற்று நில்லே. "

என்பதும் அப்பர் திருவாக்கு. ஆகவே ஆண்டவனருள் உண்டாகு மானால் விதி மதி வழித்தான் செல்லும். மற்றபடி இறையருள் சார்ந்த மதியை விதி ஒன்றும் செய்ய முடியாது என்று துணிந்து கூறலாம்.

" என்றவினை உடலோடு ஏகும் இடையேறும் வினை
தோன்றில் அருளே அடும் "

என்பது திருவருட்பயன்.

இலிங்கபுராணத் தேவர்

திரு. N. சேதுராமன், B. Sc., D. M. I. T.
டைரக்டர், ராமன் & ராமன், கும்பகோணம்.

முன்னுரை :

வடமொழியில் எழுதப்பட்ட புராணங்கள் 18 உள்ளன. அவை முறையே (1) பிரம்ம, (2) பத்ம, (3) விஷ்ணு, (4) சிவ, (5) பாகவத, (6) நாரதீய, (7) மார்கண்டேய, (8) அக்னி, (9) பவிஷ்ய, (10) பிரம்மவைவர்த்த, (11) இலிங்க, (12) வராக, (13) ஸ்கந்த, (14) வாமன, (15) கூர்ம, (16) மத்ஸ்ய, (17) கருட, (18) பிரும்மாண்ட புராணங்கள் என்பன ஆகும். ஒரு சிலர் சிவபுராணத்திற்கு பதில் வாயுபுராணம் என்றும் கூறுவர். வடமொழியில் உள்ள இப்புராணங்களுக்கு ஆங்கில மொழி பெயர்ப்புகள் உள்ளன. மற்ற மொழிகளில் மொழி பெயர்ப்புகள் இல்லை.

இங்கே நம் கட்டுரையில் ஆய்வுக்கு எடுத்துக் கொண்டது இலிங்க புராணமாகும். இதை எழுதியவர் கிருஷ்ண த்வைபாயன வியாசர் என்னும் மாமுனிவர் ஆவார். இலிங்கபுராணம் இரண்டு பாகங்களைக் கொண்டது. முதல் பாகத்தில் 108 அத்தியாயங்களும் இரண்டாவதில் 55-ம் உள்ளன.

இலிங்கபுராணம் எழுதப்பட்டகாலத்தில் அரசாண்டமன்னனைப் பற்றி முதல் பாகம் 40-வது அத்தியாயத்தில் 23 சுலோகங்கள் உள்ளன. இந்திய வரலாற்றில் புகழ் மிக்கவனாகவும், பெருவீரனாகவும், சரித்திர நாயகனாகவும் விளங்கிய இரண்டாம் சந்திரகுப்த விக்கிரமாதித்ய மன்னனையே இந்த சுலோகங்கள் குறிப்பிடுகின்றன என்பதை வரலாற்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். சந்திரகுப்த விக்கிரமாதித்யன் கி. பி. 380 முதல் 412 வரை அரசு புரிந்தவன். சிவபக்தன்; பாசுபத சித்தாந்தத்தில் பற்றுக் கொண்டவன். இச் செய்திகளைக் கல்வெட்டுகளும் உறுதிசெய்கின்றன. விக்கிரமாதித்தன் காலத்தில் இலிங்கபுராணம் எழுதப்பட்டதால் இப்புராணத்தின் காலம் கி பி. 400 என்பதை நன்குணரலாம். இலிங்கபுராணத்தில் பல செய்திகள் சொல்லப்பட்டுள்ளன. குறிப்பாகக் கீழ்க்கண்டவை விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

சிவபெருமானது பெருமை; சத்யோஜாதம்; வாமதேவம்; தத்புருஷம்; அகோரம்; ஈசானம்; சிவலிங்கத்தின் தோற்றம்;

சிவபெருமானின் அவதாரங்கள்; பிரும்மா விஷ்ணு மற்றும்தேவர்கள் சிவபெருமானை பூஜித்தது; அடி முடி தேடியது; சிவபெருமானை பூஜை செய்யும் முறைகள்; சிவபெருமானின் ஆயிரம் பெயர்கள்; சிவபெருமானின் கோவில்கள்; உமாமகேஸ்வரர்; அஷ்டவீரங்கள்; அஷ்டாங்க யோகம்; எட்டு வகைச் சித்திகள்; நமசிவாயத்தின் பெருமை; சிவபெருமான் சரபராக அவதரித்து நரசிம்மனின் வெறியை அடக்கியது; அர்த்தநாரி தத்துவம்; பரிசுத்தமான பாசுபத விரதத்தின் பெருமை; ஜீவனே சிவம் என்று கூறும் பாசுபதம்; பிரம்மனின் கபாலத்தைக் கையில் ஏந்தி பலி(பிச்சை) ஏற்கும் பெருமான் சுடுகாட்டை இருப்பிடமாகக் கொண்டு நடனமாடும் சிவபெருமானே உலகத்தில் முழு முதல் தெய்வம்; அவன் எலும்புத்தலை மாலையோடு சாம்பல் பூசியவன் (பாசுபத வேடத்தான்) ஆகியவை குறிப்பிடத்தக்கவைகளாகும். (இங்கே சொல்லப்படாத பல செய்திகளும் உள்ளன. விரிவுக்கு அஞ்சி விடுக்கிறேன்)

கி. பி. 2–ஆம் நூற்றாண்டில் குஜராத் மாநிலத்தில் லகுலீசர் என்ற மகான் அவதரித்தார். இம்மகான் சிவபெருமானது 28ஆவது அவதாரம் என்றும், இவரே லகுல ஆகமத்தைத் தோற்றுவித்தார் என்றும், பாசுபத மடத்தை குஜராத்தில் காரோணம் என்னும் இடத்தில் நிறுவினார் என்றும், இலிங்க, வாயு புராணங்களும், கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன. காய ஆரோஹணம், காய அவரோஹணம் காய அவிரோஹணம் என்பதன் சுருக்கமே காயாரோஹனம் அல்லதுகாரோணம் என்று அழைக்கப்பட்டது. இன்றும் பரோடா அருகில் கார்வான் என்ற பெயரில் உள்ளது. பாசுபத மடமும் இருக்கின்றது.

காய ஆரோஹனம் என்றால் (பக்தன்) உடலுடன் மேலே (வானம்) செல்வது என்பது பொருளாகும். காய அவரோஹணம் என்றால் (பக்தனுக்காக) இறைவன் (மனித) உருவிலே இறங்கி வருகின்றார் (அவதாரம்) என்பது பொருளாகும். மீண்டும் பிறவி இல்லை என்ற பொருளில் - காய அவிரோஹணம் - உடல் முளைப்பதில்லை என்று சொல்லப்பட்டது. இவ்வடமொழிச் சொற்களின் சுருக்கமே காரோணம் என்று திரிந்தது.

கி. பி. 2–ஆம் நூற்றாண்டில் குஜராத் மாநிலத்தில் லகுலீசர் தாபித்த காரோணம் என்ற பெயரில் அடிப்படையில் கி. பி. 7–ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டிலும் மூன்று காரோணங்கள் இருந்தன. அவை முறையே காஞ்சிபுரம் காரோணம், திருநாகைக் காரோணம், திருக்குடந்தைக் காரோணம் என்பன ஆகும். இதில் முதலாவது மறைந்து விட்டது. மற்ற இரண்டும் இன்றும் இருக்கின்றன.

நாகப்பட்டினத்தில் உள்ள பாடல் பெற்ற சிவத்தலம் திருநாகைக் காரோணம் ஆகும். கும்பகோணத்தில் மகாமகக் குளக்கரையின் வடகரையில் உள்ள காசிவிஸ்வநாதர் ஆலயமே குடந்தைக் காரோணம் ஆகும். இக் கோயில்களுக்குப் பதிகங்கள் இயற்றிய சம்பந்தர். இப்பதிகங்களைப் பாடுவோர் நரையாக உடலோடு வானடையவர் (காய ஆரோஹணம்) என்றும், கருவார் இடும்பைப் பிறப்பு அறுப்பர் (காய அவிரோஹணம்) என்றும் கூறுகின்றார். பல தலங்களில் உள்ள பெருமானை நாகைக் காரோணத்தில் காணலாம் (கண்ணால் காணும் அவதாரம் - காய அவரோஹணம்) என்று அப்பர் பெருமானும் தமது பதிகத்தில் கூறுகின்றார். கி. பி. 2-ஆம் நூற்றாண்டில் தாபிக்கப்பட்ட லகுலீச பாசுபதத் தலைமைப் பீடத்தில் இடமான காரோணத்தின் பெயரைத் தாங்கித் தமிழ் நாட்டில் சிவத்தலங்கள் இருந்தன. இப்பெயரின் சித்தாந்த விளக்கங்களை 7-ஆம் நூற்றாண்டில் சம்பந்தரும் அப்பரும் தத்தம் பதிகங்களில் எடுத்து உரைத்தனர் என்பதை ஈண்டு நன்கு நோக்க வேண்டும்.

லகுலீசரின் சித்தாந்தக் கருத்துக்களையும், இலிங்கபுராணத்தில் கூறப்பட்டுள்ள செய்திகளையும் சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் காணுவதற்கு இல்லை. மாறாக இச்செய்திகளைப் பிற்காலத்து பக்தி இலக்கியங்களான பன்னிரெண்டு சைவத் திருமுறைகளில் காணலாம். இவைகளில் மிகப் பழமையானவை காரைக்கால் அம்மையாரின் பதிகங்களாகும். அடுத்துத் திருமூலர் திருமந்திரம்; மூவர் முதலிகளின் தேவாரங்கள்; திருவாசகம்; திருவிசைப்பா; திருமுகப்பாசுரம்; பெரிய புராணம்; ஆகியவை இந்த வரிசையில் வருகின்றன. உதாரணமாக இராமபிரான் இலங்கையில் இராவணனைக் கொன்ற பாவம் நீங்க இராமேஸ்வரத்தில் லிங்கம் பிரதிஷ்டை செய்தார் என்ற வரலாறு வால்மீகி இராமாயணத்தில் இல்லை. இவ்வரலாறு இலிங்கபுராணத்தில் உள்ளது. இதனை மூவர் முதலிகளின் பாடல்களில் காணலாம். பாசுபதத்தில் தலைவனாகிய சிவபெருமான் பிர்ம்மாவின் கபாலத்தைக் கையில் ஏந்திப் பலிகொள்பவன். இலிங்கபுராணத்தில் கூறப்படும் இச்செய்திகள் தேவாரங்களில் எல்லாப்பதிகங்களிலும் உள்ளன. திருமயிலைக் கபாலீஸ்வரர் கோயில், திருமயானம் என்றபெயரில் உள்ளகோயில்கள் ஆகியவை பாடல் பெற்றவை என்பதையும் சிந்திக்க வேண்டும்.

திருவாலங்காட்டுப்பதிகத்தில் சுடுகாட்டையே சிவபெருமானின் கோயில் என்றும் அது பள்ளி இடம் என்றும் காரைக்கால் அம்மையார் கூறுகின்றார். "பள்ளிஇடமும் அதுவே ஆகப் பரமன் ஆடுமே" என்பது அம்மையாரின் வாக்கு. பள்ளி என்றால் சுடுகாடு என்று

பொருள்படும். ''திருநனிப்பள்ளி - சுடுகாடு'' என்கிறார். திருஞான சம்பந்தர். சிவதீக்ஷை பெற்ற அரசனோ, அரசியோ இறந்து விட்டால் அவரது உடல் புதைக்கப்பட்டு அதன் மேல் கட்டப்படும் சிவன் கோயிலுக்குப் பள்ளிப்படை என்று பெயர். இக்கோயில்கள் மகாவிரதிகள் என்னும் பாசுபதரால் பராமரிக்கப் பட்டன என்பதைப் பலகல்வெட்டுக்களும் உறுதிசெய்கின்றன. சுடுகாடாகிய பள்ளி என்ற பெயரில் அனேக பாடல் பெற்ற தலங்கள் உள்ளன. (திருநனிப் பள்ளி) திருக்காட்டுப்பள்ளி; அகத்தியான் பள்ளி; மகேந்திரப்பள்ளி......). காடு (சுடுகாடு) என்ற பெயரிலும் உள்ளன. சோழர் காலங்களில் திருவொற்றியூர்ச் சிவன் கோயில் பாசுபத மயான மடத்துத் தலைவர்களால் பராமரிக்கப்பட்டது. இம்மடத்தின் ஆசாரியர்கள் அனைவரும் சதுரானன பண்டிதர் என்றே அழைக்கப் பட்டனர். கோயிலில் பாசுபதசித்தாந்த நூலாகிய சோமசித்தாந்தம் வாசிக்கப்பட்டது. இச்செய்திகளைக் கல்வெட்டுக்கள் மூலம் அறிய லாம். சுடுகாட்டையும் அதன் தலைவனுகிய சிவபெருமானையும் கூறுத தேவாரப் பதிகங்களே இல்லை எனலாம்.

பன்னிரெண்டு திருமுறைகளிலும் கூறப்பட்டுள்ள செய்திகள், இலிங்க புராணத்துடன் அதிகமாக ஒத்துவருவதால் இத்திருமுறை களில் பாசுபத சித்தாந்தத்தின் தாக்கம் பெரிதும் பரவலாக உள்ளது என்பதை அறியலாம். காலப்போக்கில் அறுவகைச் சைவ சமயமும் ஒன்றாகக் கலந்து விட்ட காரணத்தினால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை எல்லாமே சைவ சித்தாந்தம் என்று நினைக்கக் கூடிய அளவிற்கு மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. இம்மாற்றம் 14-ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு ஏற்பட்டு இருக்கலாம். இதை நான் எழுதும் காலத்தில் இக்கருத்திற்கு எதிர்ப்புகளும், சர்ச்சைகளும் ஏற்படும் என்பதை நான் அறிவேன். அவ்வாறு ஒரு எழுச்சி எழ வேண்டும் என்பதே எனது அவா, இதன் அடிப்படையில் ஆய்வு களும் உண்மை விளக்கங்களும் வெளிவரவேண்டும்.

வடநாட்டைப் பொறுத்தவரை பாசுபதம் பல மாற்றங்களுடன் இன்றும் உள்ளது. கர்நாடகத்தில் பாசுபதம் வீரசைவமாக விளங்கு கின்றது, பாசுபதத்தில் வேதமும் ஆகமமும் ஏற்றுக் கொள்ளப் பட்டன. ஜாதிமதபேதங்கள் கிடையாது. மனிதன் தெய்வமாகிறான். ''மானுடனாகிய சண்டியை வானவன் ஆக்கிய'' பெருமையை நக்கீரர் 11-ஆம் திருமுறையில் கூறுகின்றார். பல தெய்வத் திரு உருவங்கள் உள்ள சிவன் கோயிலில் தெய்வமாக வணங்கப்பட்ட முதல் மனிதன் சண்டிகேஸ்வரர் தான். அவர் இறந்து போவதாகச் சொல்லப்படவில்லை. மாறாக அந்த உடம்புடன் அங்கேயே இருக் கின்றாராகப் பெரிய புராணம் கூறுகின்றது. அனையா உடலோடு சேரமான், சுந்தரர், காரைக்கால் அம்மையார், அமர்நீதிநாயனாரும்

அவரது குடும்பத்தினரும், திருநீலகண்டரும் அவரது மனைவியாரும் ஆகியோர் கயிலைக்குச் சென்றனர் என்னும் வரலாறு "காய ஆரோஹணம்" என்று சொல்லப்படும் பாசுபத சித்தாந்தத்தில் மூலக் கருவாகும். இதுதான் மானுடன் வானவனாகும் விந்தை. இதைக் கூறுவது பாசுபத சித்தாந்தம். தலைமயிரை கயிறாகக் கொண்டு பஞ்சவடி என்னும் பூணூலாக அணியும் சிவபெருமான் மானக் கஞ்சாற நாயனாரின் மகளின் முடி மயிரைப் பெற்றது; சிறுத்தொண்ட நாயனாரின் வரலாறு; சாதி மத பேதங்களை அகற்றிடும்முறையில் சொல்லப்படும் சிறப்பான கதைகள்; இப்படிப் பெரிய புராணத்தில் பல கதைகள் பாசுபதத்தின் அடிப்படையில் எழுந்த காரணத்தால் பாசுபதத்தின் வாரிசான வீரசைவம் பெரிய புராணத்தை அப்படியே ஏற்றது. கன்னடத்தில் பெரிய புராணம் பல நூல்களில் பலகாலகட்டங்களில் வெளிவந்துள்ளது. திருவீழிமிழலை பதிகத்தில்,

சவம்தாங்கு மயானத்துச் சாம்ப லென்பு
தலையோடு மயிர்க்கயிறு தரித்தான் தன்னைப்
பவந்தாங்கு பாசுபத வேடத் தானைப்
பண்டமரர் கொண்டுகந்த வேள்வி யெல்லாம்
கவர்ந்தானைக் கச்சியே கம்பன் தன்னை (6-50-2)

என்று அப்பர்பெருமான் கூறுவதையும் சிந்திக்க வேண்டும். காஞ்சி ஏகாம்பர ஈஸ்வரர் கோயில் கிழக்குப் பார்த்த சன்னதி. அதற்கு நேர் எதிராக வெளியே "திருக்கச்சி மயானம்" என்ற கோயில் மேற்குப் பார்த்த சன்னிதியுடன் உள்ளது. இக்கோயிலில் முதல் குலோத்துங்க சோழனது 6-ஆம் ஆண்டுக் கல்வெட்டு உள்ளது. (S. I. I. IV-813) இதன் காலம் கி.பி. 1076 ஆகும். இக்கல்வெட்டில இக்கோயிலின் இறைவனின்பெயர் திருமயானத்தில் பிரும்மபுரத்து மகாதேவர் என்று உள்ளது. இக்கோயிலைப் பராமரிக்கும் மடத்தின் ஆசாரியர் "திரு மயானம் உடைய பண்டிதன்" என்னும் பாசுபதர் என்று காணப்படுகின்றது. துண்டுக் கல்வெட்டுக்களில் அர்ச்சகரின் பெயர் திருமயானபட்டன் என்றும் உள்ளது. இதனை நேரிடை சென்றும் படித்து உள்ளேன். அப்பர் பெருமான் கூறும் கச்சியேகம்பத்து மயானம் என்பது இக்கோயில் தான் என்பதை நன்கு அறியலாம்.

இக்கட்டுரையில் முன்னுரையே நீண்டுவிட்டது. பின்னால் சொல்லப்போகும் செய்திகளுக்கு இம் முன்னுரை தேவைப்படுகின்றது. இலிங்கபுராணம், லகுலீசரின் சித்தாந்தங்கள், பாசுபத சைவம், இவைகளின் தாக்கம் தேவாரத் திருமுறைகளில் பரவலாக உள்ளன என்னும் கருத்தின் ஆழத்தைத் தெரிந்து கொண்டால் பல செய்திகளின் உண்மை விளக்கங்களை அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கும்.

மாலும் அயனும் அடி முடி தேடியது :

இலிங்க புராணத்தில் முதல் பாகம் அத்தியாயம் 17-இல் திருமாலும் பிரும்மாவும் அடி முடி தேடிய வரலாறு கூறப்படுகிறது. ஒரு சமயம் படைப்புக்கள் யாவும் மறைந்தன. ஜீவராசிகள் எல்லாம் எங்கோ ஒடுங்கின. எங்கும் ஒரே இருள் கவ்வியது. பார்க்கும் இடமெங்கும் நீர் பிரவாகம் வெள்ளம் போன்று காட்சி அளித்தது. நீர் பிரவாகத்தின் நடுவிலே திருமால் பள்ளி கொண்டிருப்பதை பிரும்மா பார்த்தார். தன்னைவிடப் பெரிய தெய்வம் ஒன்று உளதோ என்று நினைத்துக் கோபத்துடன் திருமாலைப் பார்த்து, ''நீர் யார்'' என்று வினவினார்.

திருமால் பள்ளிகொண்ட நிலையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு பிரும்மாவைப்பார்த்துக்கூறலுற்றார். ''பிரும்மாவே! நானே அகில உலகத்திற்கும் தலைவன், மகா விஷ்ணுவாகிய என்னைப் போன்று வேறு ஒரு பெரிய தெய்வம் கிடையாது'' என்றார். இதைக் கேட்டவுடன் பிரும்மாவிற்கும் திருமாலுக்கும் இடையே பெரிய சண்டை மூண்டது. மிகப்பெரிய தெய்வம் நீயா நானா என்ற வினாக்களை எழுப்பிச் சர்ச்சை புரியலாயினர். அச்சமயத்தில் அவர்களின் நடுவே மிகப்பெரிய ஜோதி – நெருப்புப் பிழம்பு இலிங்க வடிவில் தோன்றியது. ஆரம்பமும் முடிவும் அறிந்து கொள்ள முடியாத அளவில் காட்சி அளித்த அந்த நெருப்புப் பிழம்பைப் பார்த்து பிரம்மாவும் திருமாலும். நடுங்கினர்.

திருமால் கூவலுற்றார். ''பிரும்மாவே நாம் இந்த நெருப்பு இலிங்கத்தை சோதனை செய்வோம். வராகமாக (பன்றி) உரு வெடுத்துக் கீழ் நோக்கிச் சென்று இந்த நெருப்பின் அடி எது என்பதை அறிந்து வருகிறேன். நீர் அன்னத்தின் உருவில் மேலே பறந்து சென்று நெருப்பு பிழம்பில் முடி எது என்பதை அறிந்து வாருங்கள்'' என்றார். திருமாலும் பிரம்மாவும், வராகமாகவும், அன்னமாகவும் உருவெடுத்து நெருப்புப் பிழம்பில் அடி முடி தேடலாயினர். பல காலங்கள் சென்றன. திருமாலும் பிரம்மாவும் களைத்துப் போயினர். அப்பொழுது நெருப்புப் பிழம்பான இலிங்கத்தின் நடுவே ஓம் என்ற நாதம் கேட்டது. அங்கே சிவபெருமான் தோன்றி திருமாலுக்கும், பிரம்மாவுக்கும் காட்சி அளித்தார். இருவரும் தம்மை விட பெரிய தெய்வம் சிவபெருமானே என்பதை உணர்ந்தனர். சிவபெருமானை துதித்து வழிபட்டனர். பெருமானின் ஈசானம், தத்புருஷம், அகோரம, வாமதேவம், சத்யோஜம் ஆகிய அமைப்புகளைக் கண்டு வணங்கினர். (சதாசிவ கோலம்).

(தொடரும்)

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத்திருநாளில் தேவார வைப்புத்தலங்களின் சிறப்பு வழிபாடுகள் நிகழ்த்துவிக்கப் பெறுகின்றன. சுக்கில - புரட்டாசி - ஆயில்ய வழிபாடு 26—9—89 செவ்வாய் அன்று மாகுடி அருள்மிகு சிவலோகநாதசுவாமி திருக்கோயிலில் சிறப்பு வழிபாடு நடைபெற்றது. தஞ்சை மாவட்டத்தில் தரங்கம்பாடி வட்டத்தில் ஆக்கூர் முக்கூட்டிலிருந்து பூம்புகார் செல்லும் பேருந்து வழியில் உள்ள பூந்தாழை என்ற ஊரிலிருந்து கிழக்கே 2 கி. மீ தூரத்தில் அமைந்துள்ளமாமாகுடி என வழங்கப்பெறும் மாகுடி, திருநாவுக்கரசர் தேவாரத்தில் இடம் பெற்ற தலமாகும். இத்தலச் சிறப்புக்களை விளக்கித் தருமை ஆதீனப்புலவர் வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம்.ஏ., விரிவுரையாற்றினார். "மாகுடி, மாட்டூர், கூந்தலூர், புதுக்குடி, தக்களூர் - தேவாரத் திருப்பாடல்களும் தலச்சிறப்புக்களும்" என்ற நூல் வெளியிடப் பெற்றது. அன்பர்கள் வழிபாடு ஆற்றிப் பயன் பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைத் திருக்கூட்டம் தருமை ஆதீனத்திருமடத்தில் ஆங்கிலமாத முதல்ஞாயிற்றுக்கிழமை தோறும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இம்மாதம் 99 ஆவது அருளுபதேசம் 1—10—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது.

ஸ்ரீலஸ்ரீ குருமணிகள் திருத்தொண்டர் புராணத்தின் வழி நாயன்மார் வரலாறு அருளிச் செய்து சைவ சித்தாந்த விளக்கம் அருள்கின்றார்கள். இம்மாதம் சத்திநாயனார் புராண உபதேசம் அருளினார்கள். ஐயடிகள் காடவர்கோன் நாயனார் புராணப் பாடல்களைப் பாராயணம் செய்தருளினார்கல். சத்திநாயனார்புராண விளக்கமாகச் "சிவனடியார்கள் தவறு செய்யமாட்டார்கள்" என உணர்த்தினார்கள். எறிபத்தர் வரலாற்றோடு ஒப்பிட்டுப் "பிழைபடின் அன்றிக் கொல்லார்" என்ற தொடரை மேற்கோள்காட்டி அரிய கருத்து

விளக்கம் வழங்கினார்கள். பரமேசுவரனும் அவனருள் பெற்ற அடியார்களும் செய்யும் ஒறுப்பு ஆன்மாக்களுக்கு நன்மை தரும் பொருட்டேயாகும்'' என தத்துவ நெறி புகட்டி மகிழ்வித்தார்கள்.

ஆதீன அடியார்கள், அன்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். அடுத்து 100 ஆவது அருளுபதேசம் 5—11—89 அன்று நடைபெறும். அன்பர்கள்கலந்துகொண்டு அருள்நலம் பெறுவார்களாக.

ஸ்ரீ அருணந்தி தேவர் குருபூஜை விழா

சந்தான குரவருள் நால்காமவராகிய ஸ்ரீ அருணந்தி தேவர் குருபூஜை விழா புரட்டாசிப் பூரநாள் கூடிய 28—9—89 வியாழக் கிழமையன்று ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் தருமபுரம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளுடன் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் தருமை ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயிலுக்குக் காலை மாலை இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடு ஆற்றினார்கள் தருமையில், மாலை 7 மணியளவில் தருமை ஆதீனப் புலவர் திரு. வி. சா. குருசாமி தேசிகர், எம். ஏ., அருணந்தி தேவர் அருள் நூல்கள் பற்றியும், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., பி. எட்., அருள்நந்திதேவர் அருள் வரலாறு பற்றியும் உரை யாற்றினர்.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர்திருக்கோயிலில் ஸ்ரீசந்தானாசாரியர் சந்நிதியில் விரிவுரை நிகழ்ச்சிநடைபெற்றது. திருமுறைக் கலாநிதி சிதம்பரம் திரு. எம். கனகசபை பிள்ளை திருமுறைப் பண் இசை நிகழ்த்தினர். சிதம்பரம் ஸ்ரீ வித்யாநிதி வேத வித்யா சாலை ஸ்தாபகர் ஸ்ரீ சிவஸ்ரீ. ஜி. பரமேசுவரதீக்ஷிதர் தலைமையில் டாக்டர் திரு. இரா. செல்வக்கணபதி, எம். ஏ., பி. எட்., பிஎச். டி., அருணந்தி தேவர் அருள் நூல்கள் பற்றி உரையாற்றினர். அன்பர்கள் குருவழிபாடு ஆற்றியும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயன் பெற்றனர்.

ஸ்ரீ மகாலட்சுமி துர்க்காதேவிக்கு 39 ஆவது சதசண்டி வேள்வி விழா

தருமை ஆதீன ஸ்ரீ அஷ்டாதசபுஜ மகாலட்சுமி துர்க்கா தேவிக்கு 1—10—89 முதல் 10—10—89 முடியப் பத்துநாட்களும் நவராத்திரி விழாவை முன்னிட்டு, உலகநலம் கருதி, சதசண்டி

வேள்வி விழா ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஸ்ரீ துர்க்கா தேவி சந்நிதியில் மலர்களாலும், மின் விளக்குகளாலும் அலங்கரிக்கப் பெற்றிருந்த மகாவேள்வி மண்டபத்தில் யாக கலசங்கள் வைத்து அலங்கார ஆராதனைகள் செய்வித்துச் சிறப்பான முறையில் சதசண்டிவேள்வி நிகழ்த்தப் பெற்றது. நாள்தோறும் சுவாசினி, குமாரி, வடுபூஜைகள், சதுர்வேத பாராயணம், தேவி மகாத்மிய பாராயணம், திருமுறைகள், அபிராமி அந்தாதி பாராயணம், ஸ்ரீ துர்க்காதேவிக்கு லட்சார்ச்சனை, ஸ்ரீவித்யா சக்கரமாகியமேருவிற்கு சகஸ்ரநாமார்ச்சனை மற்றும் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன.

9—10—89 திங்கட்கிழமை பகல் சப்தசதிஹோமமும், மகா பூரணாகுதியும் நிகழ, வேள்வி இனிது நிறைவுற்றது. 10—10—89 செவ்வாய்க்கிழமையன்று விஜயதசமிநாளில் காலை துர்க்கா தேவிக்குக் கலசாபிஷேகமும் விசேஷ அலங்கார ஆராதனைகளும் நிகழ்வுற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் திருவிழாவின் போது இரு வேளைகளிலும் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர் கட்குத் திருவருட் பிரசாதம் வழங்கியருளினார்கள்,

ஆதீனக் கல்வி நிலையங்களின் கலைமகள் விழா

தருமை ஆதீனக் கல்வி நிலையங்களாகிய வேத சிவாகம பாடசாலை, தேவாரப்பாடசாலை, ஸ்ரீ குருஞானசம்பந்தர் தொடக் கப்பள்ளி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, ஆதீனக் கலைக் கல்லூரி என்னும் இவற்றின் சார்பில நவராத்திரிவிழா நாட்களில் கலைமகள்விழா இனிதே நிகழ்வுற்றது. நாள்தோறும் பிற்பகல் 6-30 மணியளவில் தருமை ஆதீனத் திருநெறிய தெய்வத் தமிழ்மன்றத்தில் விழா நிகழ்ச்சிகள் நடைபெற்றன. பேராசிரியர் களும் பல்துறை அறிஞர்களும் தொடக்கவுரை நிகழ்த்தினர்.

தருமை ஆதீனக் கலைக் கல்லூரி மாணவர்களும்' கல்விநிலைய ஆசிரியர்களும் சிறப்புரை நிகழ்த்தினர். தருமை ஆதீனக் கலைக் கல்லூரி மாணவர்கள் விரிவுரை ஆற்றினர். கல்வி நிலைய மாணவ மாணவியராற் கலைநிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை விழா

தருமை ஆதீனம் 4-ஆவது குருமூர்த்திகளாய் எழுந்தருளி 17 ஆம் நூற்றாண்டின் இடைக்காலத்தில் அருட்செங்கோல் ஓச்சியவர்களும்

ஸ்ரீகுமரகுருபரர், ஸ்ரீ வெள்ளியம்பலவாணர் முதலியோர்க்கு ஞான உபதேசம் அருளியவர்களும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக சுவாமிகள் குருபூஜை விழா புரட்டாசி - சுக்கிலபட்சம் - ஏகாதசி கூடிய 10—10—89 செவ்வாய்க்கிழமையன்று தருமபுரம் திருமஞ்சன வீதியில் உள்ள குருமூர்த்த ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் நிறுவிய அறக்கட்டளைச் சார்பில் விசேஷ ஆராதனைகளும் மாகேசுவர பூசையும் திருமுறைப் பாராயணமும் நடைபெற்றன.

நண்பகல், மாலை இருவேளைகளிலும் தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கினார்கள். நண்பகல் மாகேசுவரபூஜை நடைபெற்றது மாலை 6-30 மணி அளவில் திருமுறைப் பண்ணிசையை அடுத்துக் கருத்தரங்க நிகழ்ச்சி நடைபெற்றது தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் ஆசியுரை வழங்கினார்கள். திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் தொடக்கவுரை நிகழ்த்தினார்கள். வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் பண்டாரமும்மணிக்கோவை பற்றியும், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி ஸ்ரீகுமரகுருபரர் பிரபந்தங்கள் மற்றியும். திரு. சாமி. கிருஷ்ணமூர்த்தி பண்டார சாத்திரங்கள் மற்றியும், வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் தருமை ஆதீனக் குருபரம்பரை பற்றியும் உரை நிகழ்த்தினர். ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் குருமூர்த்த வழிபாடு ஆற்றி அன்பர்கட்குக் குருவருட்பிரசாதம் வழங்கியருளினார்கள்.

நிறைபணிவிழா

புரட்டாசிப் பௌர்ணமியன்று இறைவனுக்குச் சிறப்பு முறையில் நிகழ்த்தப்பெறும் வழிபாடு நிறைபணி விழா.. சந்நிதியில் மலர்ப்பந்தல் அமைத்து, இளநீர், காய், கனி முதலியவற்றைத் தொங்கவிட்டு அழகுபெறச் செய்தும், இறைவனுக்கு அபிஷேக அலங்காரங்கள் நிறைவுறச் செய்தும் கொண்டாடப்பெறுவது, "இந்நாளில் திருமால் இறைவனைப் பூசித்து அருள்பெற்றார்; திருமாலின் ஆணைப்படி தேவர்கள் இறைவனைப் பூசித்தனர்" எனச் சிவவாக்கியம் கூறுகிறது. இவ்விழா தருமை ஆதீனம் திருக்கோயிலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பக்தர்கள் இறைவனை வழிபட்டு இன்புற்றனர்.

✻ எதிர்காலம் ✻

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்
ஒய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கிலஹு ஐப்பசிமீ" 1வ முதல் 30வ முடிய)
(17—10—89 முதல் 15—11—89 முடிய)

சுக்கிலஹு ஐப்பசிமீ" முதல் தேதி மங்களவாரம் கார்த்திகை நக்ஷத்திரம் பத்திரை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 26 நாழிகை 17 விநாடிகள் மீன லக்னத்தில் ஸ்ரீ உலக ரட்சகரான சூரிய பகவான் கன்னியா ராசியிலிருந்து துலா ராசி சங்கிரமணமாக ஐப்பசி மாதம் பிரவேசம் செய்தருளுகின்றார். அன்று விஷு புண்ணியகாலம் துலாகாவேரி ஸ்நானாரம்பம். எல்லா மாந்தர்களும் மாதம் பூராவும் பிராதகாலத்தில் நீரோட்டமான ஆறுகள், திருக்குளம், அணை, நீர்வீழ்ச்சி இவற்றில் இருப்பிட சௌகரியத்துக்கு வசதியாகவுள்ள ஓர் நீர் நிலையில் ஸ்நானம் செய்து பரிசுத்தமாகி தேவாலயம் சென்று இறைவனை தரிசித்து வருவதினின்றும் நல்ல ஆரோக்கியம் தேக உஷ்ணம் தணிந்து கண்களில் பிரகாசம் ஏற்படுதல் ஆகும். ஈஸ்வர கடாக்ஷத்தினால் மனம் ஒரு நிலைப்பட்டு செயல்பாடுகளில் செம்மையை ஏற்படுத்தும். செல்வமும் திருவும் உண்டாகும். சங்கிரமண கால கிரக ஸ்திதியின் பலனாது உலக மக்கள் அனைவரும் உணவு உடை இருப்பிட சௌகரியங்கள் பலவும் அடைந்து மகிழ்வர். பிரஜைகள் அனைவரும் ஊக்கமிகுதியில் தொழில் வளம் பெருக்கி உயர்வர். நாடுகளில் பொருளாதாரம் திருப்தி நிலையில் இருந்துவரும். தேசங்களில் ஆன்றோர்களால் தர்மங்கள் தேவாலயத் திருப்பணிகள் பொதுநலத் தொண்டாற்றுதல் பசிப்பிணி தீர்க்க அன்னதானங்கள் வெகுவாக நடந்து கொண்டிருக்கும். தேசங்களில் அரசர்கள் ஜனாதிபதிகள் ஆளுநர்கள் மக்கள் நலம் காத்து இறைமை செலுத்தி வருவர். சகல பிரஜைகளையும் இரக்ஷித்து வருவர். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரிய பீடங்களில் வந்து இறைவன் சித்தம் கொண்டு சிவஞான திருமுக தோற்றத்தில் பொலிவுற்று விளங்குகின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜகத் குருமகான்களானவர்கள் லோகமாந்தர்களுக்கு ஈஸ்வர பக்தியில் சிவாசாரத்தில் மேன்மைஸ்திதியுற நற்போதனை செய்தருள்வார்கள். வித்தியா தானமாக சிவாசார தத்துவ ஞான நூல்களை வெளியீடு செய்தும்

வேதசாஸ்திர பாடசாலைகள் துவங்கச் செய்தும் உயர் மைய சைவ சித்தாந்த போதனை சாலைகள் நிறுவியும் வித்தகர்கள் உயர் கல்வி ஞான எழுச்சியுடையோருக்கு பட்டமளித்து மேலும் உயர ஆசீர் வதித்தும் அருள்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் நித்தியம் ஆறுகால பூசைகள விசேஷ பூசனைகள் சிறப்பாக நடந்து வரும். எல்லோரும் ஈஸ்வரதரிசனம் செய்து மனம் தெளிவுடையவர் களாகி இனிது உயர அருள் வந்தெய்தும் சைவம் தழைக்கும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். அதற்கேற்ப செலவினம் ஆகும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் அக்டோபர் 27 தேதிக்குள்ளாகவே நல்ல பிரயோசன சித்தியும் எதிலும் ஜெயமும் ஏற்படுத்தி தரும். ஓர் புண்ணிய ஸ்தலயாத்திரை சென்று வருதல் ஆகும். நல்ல திட்டம் வகுத்தல் அவசர ஈடுபாடு ஆகும். எல்லாக் காரியங்களும் அரச கெடியில் நடந்து வரும். அக்டோபர் 31 நவம்பர் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபபலன் தரும். பணவருமானம் மூன்று வகையில் வந்து சேரும். வித்துவத்துவம் கலைத்துறையில் புகழும் ராஜசன்மானஙகளும் தரும். மந்தஸ்திதியில் இருந்தவை அனைத்தும் அக்டோபர் 27 தேதி முதல் ஜெய பிராப்தியாக நடந்தேறும். நலவர் பிரபலஸ்தர் சந்திப்பு அளவளாவும் மகிழ்ச்சி யளிக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம நன்றாக இருந்துவரும். நவம்பர் 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனை நடக்கும். பண வருமானம். வெகுவாக வரும். வித்தியா வியாபாராதிகளில் கலைத் துறையில் மிகுந்த பலனையளிக்கும். ஞானமார்க்க சிந்தனையாகும் பற்றின்மையாக பேசுதல் சஞ்சலம் காணும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்கு அருச்சனை செய்வதினின்றும உறுதிபாடு அளிக்கும். நவம்பர் 9 தேதியில் அரசு விகிதம் வந்து நன்மை உண்டாகும். ஜீவனோபாயங்களில் மேன்மை ஸ்திதியை ஏற்படுத்தும். நவம்பர் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். அக்டோபர் 17, 18, நவம்பர் 14, 15 தேதிகளில் நல்லவகையில் செலவு ஏற்படும். செவ்வாய், புதன் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் நற்பலன் தரும். பணவருமானம் வந்துகொண்டிருக்கும். பாரம்பரிய சம்பிரதாய விசேஷங்களில்

செலவும் ஆகும். வித்தியா வியாபாரதிகளில் அக்டோபர் 23 தேதிக்கு மேல் அரசு நன்மை விகித அனுகூலம் ஏற்பட்டு வரும். எல்லாக் காரியங்களும் தெய்வ பலனில் சிறப்புடன் நடந்து வரும். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். நவம்பர் 7, 8 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும்; பண வருமானம் தரும். பூஷணங்கள் புதிய வஸ்துக்களின் பிராப்தி யளிக்கும். வாகன சுகம் திருப்தியளிக்கும் பசுபால் பிராப்தி மிகும். புத்திரர்களின் தொழில் உத்தியோகம் ஆகியவற்றில் நல்ல முன்னேற்றம் தரும். தாம்பத்திய வாழ்க்கை தான தர்மங்களுடன் தெய்வபக்தியில் இனிது நடந்து வரும். எல்லா பிரவிருத்திகளும் இலட்சுமி கடாக்ஷத்தில் நடந்து கொண்டிருக்கும். நவம்பர் 9, 10, 11 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். நல்ல பணவருமானம் தரும். ஓர் ஆபரண பிராப்தி அளிக்கும் அக்டோபர் 23 தேதிக்கு ஓர் அரிய விஷயத்தில் சாதனை தரும். வித்துவித்துவம் கலைத்துறையில் பிரயோஜனம் தரும். செயல் பாடுகளில் மேன்மை ஸ்திதி ஆகும். ஓர் இயந்திர வாகனம் அனுபோக பிராப்தியாகும்; எல்லாக் காரியங்களும் வினுடன் நடந்துகொண்டிருக்கும்; தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். நவம்பர் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம் செவ்வாய், புதன் சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வெகுவாக வரும். நல்லாபரணம் தரும். ஓர் புனித க்ஷேத்திரம் சென்று வருதல் ஆகும். நவம்பர் 9 தேதி அனுல் ஓர் உயர் பொருள் கைக்கு வரும். அரசுலிகிதம் வந்து சந்துஷ்டி நிலவும். அக்டோபர் 26, 27ல் சுப செலவினம் ஆகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 17, 18 நவம்பர் 14, 15 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனாக நடக்கும். பண வருமானம் வரும். அவசியமான செலவினமும் ஏற்படும். செய் தொழில் உத்தியோகம் இவற்றில் விளம்பரம் அரச கண்யம் ஏற்படுதல் ஆகும். சாஸ்திர விதிப்படி எல்லாக்காரியங்களையும்

துவங்குதல் ஆகும். நெறி முறை வற்புறுத்தலில் பணியாளர் சிஷ்யர்கள் மனக்கசப் புறினும் பின் நலமுணர்ந்து போற்றுவர். தாரம்புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்து வரும். அக்டோபர் 19,20,21 தேதிகள் சந்திராஷ்டமம். சனி, ஞாயிறு சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் மூன்றுவகையில் வரும். வித்துவத்துவம் கலைத்துறையில் உயர் ஸ்திதியளிக்கும். எல்லாக் காரியங்களிலும் வெற்றியை ஏற்படுத்தும். புத்திரர் அல்லது புத்திரிக்கு நன்மை ஏற்பட்டுவரும். நல்லோரால் போற்றுதல்கள் மகிழ்ச்சி சம்பவங்கள் ஏற்படும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வ பக்தியில் தானதர்மத்துடன் நடந்து வரும். அக்டோபர் 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வரும். அவசிய செலவினங்களும் இருந்துவரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் கௌரவிக்கப்படுதல் ஆக்கப் பணிகளில் அபி விருத்தி ஏற்படுதல் ஆகும். எல்லா அரிய பெரிய காரியங்களும் புத்திமேம்பாட்டில் செயல்பட்டுக் கொண்டிருக்கும். அரசு விகிதத் தொடர்புகளில் நன்மை ஏற்பட்டுவரும். மேலோர் பிரபலஸ்தர் ஸ்லாகிப்பர். அக்டோபர் 24, 25 தேதிகள் சந்திராஷ்டமம். புதன். வியாழன் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் மதிப்பாகவந்துசேரும். வித்துவத்துவம் கலைத்துறையில உத்தியோகத்தில் நவம்பர் 9 தேதி முதல் உயர் ஸ்திதியாகும். நல்லோர் ஓர் இயந்திர சாதனம் கையாலும் பிராப்தியளிக்கும். எல்லா பெரிய காரியங்களும் தெய்வ பலனில் நல்ல விதமாக நடக்கும். தாரம்புத்திரர்களுக்கு சௌக்கியபலன் தரும். அக்டோபர் 26, 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

மீன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் தரும். வித்துவத்துவம் கலைத்துறையில் அக்டோபர் 24 தேதியில் நன்மையை ஏற்படுத்தும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு அளவளாவல் ஆகும். மந்தஸ்திதியாக இருந்த எல்லாக் காரியங்களும் பூர்த்தியடைதல் ஆகி நல்ல கௌரவத்தை உண்டு பண்ணும். ஓர் விபத்து சம்பவித்து தப்பும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக 'இருந்துவரும். அக்டோபர் 29, 30 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

ஐப்பசி மாதச் சிறப்பு நாட்கள்

17—10—89 செவ்வாய், துலாவிஷுபுண்யகாலம். துலாரவி 27-19 திருவையாறு, மயிலாடுதுறை, வள்ளார்கோயில் முதலிய தலங்களில் துலாவிஷு தீர்த்தம். திருக்கடவூர் ஸ்ரீ காலசம் ஹார மூர்த்திக்கு அபிஷேம். சீகாழியில் உமாமகேசுவரருக்கு உச்சிக் காலத்தில் புழுக்காப்பு மயிலாடுதுறை, தலைக்காவேரி முதலிய தலங்களில் துலாஸ்நான ஆரம்பம்; வேளூர் கிருத்திகை, கிருத்திகை விரதம், தருமை ஸ்ரீ ஷண்முகர் அபிஷேகம், சங்கடஹரசதுர்த்தி.

20—10—89 வெள்ளி, கமலைஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் குருபூஜை. வேளூர் ஸ்ரீ தன்வந்திரி குருபூஜை.

22—10—89 ஞாயிறு, காளாஷ்டமி, தருமை 25 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணியதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூசை. சக்தி

23—10—89 திங்கள், ஆயில்ய விழா.] நாயனார் குருபூஜை.

25—10—89 புதன், ஐப்பசிபூரம், திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஞானபீடம் அமர்ந்த நாள்.

27—10—89 வெள்ளி, மாதசிவராத்திரி, பின்னிரவு விடியல் நகர

28—10—89 சனி, தீபாவளிப்பண்டிகை. [சதுர்த்தசிஸ்நானம். தீபாவளி.

29—10—89 ஞாயிறு, சர்வ அமாவாசை, கேதாரகௌரிவிரதம். ஸ்ரீ லக்ஷ்மி குபேரபூசை. மயிலாடுதுறை - வள்ளலார்கோயில் ஸ்ரீ மேதாதக்ஷிணமூர்த்தி கங்காதேவியுடன் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். மெய்கண்டதேவர் குருபூசை.

30—10—89 திங்கள், வேளூர், மயிலாடுதுறை குமரக்கட்டளை, சீகாழி, திருச்செந்தூர், பழனி முதலிய தலங்களில் ஸ்கந்தசஷ்டி உற்சவ ஆரம்பம். விக்ரமசகம் 2046.

1—11—89 பூசலார்நாயனார் குருபூஜை.

2—11—89 வியாழன், சதுர்த்தி விரதம்.

3—11—89 ஐயடிகள்காடவர்கோன் நாயனார் குருபூஜை.

4—11—89 சனி, ஸ்கந்தசஷ்டி விரதம். சூரசம்ஹாரம்.

5—11—89 ஞாயிறு, வேளூர், கந்தசஷ்டி உற்சவ தீர்த்தம்.

8—11—89 புதன், கிருதயுகாதி வேளூர் ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி திருவீதியுலா.

9—11—89 வியாழன், சர்வ ஏகாதசி.

11—11—89 சனி, திருமூல நாயனார் குருபூஜை.

12—11—89 ஞாயிறு, பௌர்ணமி விரத பூஜையில் அன்ன அபிஷேகம். நெடுமாற நாயனார் குருபூஜை.

13—11—89 திங்கள், கிருத்திகை விரதம். வேளூர், கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். இடங்கழிநாயனார் குருபூஜை.

15—11—89 புதன், மயிலாடுதுறை - வள்ளலார்கோயில் திருவையாறு முதலிய தலங்களில் கடைமுக தீர்த்தம்.

GNANASAMBANDAM

Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

குருபாதம்

தருமை ஆதீனம்

ஞானசம்பந்தம் பதிப்பக வெளியீடு

சித்தாந்த நிச்சயம்

திருத்தருமை ஆதீனம் ஒன்பதாவது குருமூர்த்திகள் ஸ்ரீ திருநாவுக்கரசு தேசிக சுவாமிகள் அருளிய நூல் இது. 119 பாடல்கள் கொண்டது. வீட்டுநிலையில் உயிரது நிலை, இறைநிலை, மலநிலை மற்றும் அணைந்தோர் தன்மை முதலியவற்றை வரையறைசெய்து விளக்குவது. ஏகான்ம வாதம், சிவசமவாதம், ஈசுவர அவிகாரவாதம், பரிணாம வாதம், சிவாத்துவிதம் என்னும் கொள்கைகளை மறுத்துச் சுத்தாத்வைத சைவசித்தாந்த செந்நெறியைவிளக்குவது. தருமை ஆதீனப் புலவர், டாக்டர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்களின் குறிப்புரை, ஆராய்ச்சி முன்னுரையுடன் இந்நூல் செம்மையாகப்பதிப்பிக்கப்பெற்றுள்ளது. தருமை ஆதீனம் வடக்குக் குருமூர்த்தங்கள் ஸ்ரீ சச்சிதானந்த விநாயகர் திருக்கோயில் குடமுழுக்கு விழா மலராக வெளியிடப் பெற்றுள்ளது.

அளவு : டபிள் கிரவுன் 1×16. பக்கங்கள் 72.

அடக்க விலை ... ... ரூ. 2—50

அஞ்சல் செலவு (நூல் அஞ்சல்) ரூ 1—00

கிடைக்குமிடம் :-

செயலாளர்,
ஞானசம்பந்தம் பதிப்பகம்,
தருமை ஆதீனம்,
தருமபுரம், மயிலாடுதுறை 609 001.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram,
at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-10-89.